
வெறிபிடித்த ஒரு பயங்கர யானையிடம்
வஞ்சம் தீர்க்கப் போரிட்ட
ஒரு மனிதனின் புதுமையான கதை

# யானை



செங்கை
ஆழியான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யா/இணுவில் மத்திய கல்லூரி, இணுவில்

**பரிசளிப்பு—1992**

செல்வன்/செல்வி [illegible]

ஆண்டு: 8  இல்லம்: ........

விடயம் / பாடம்: வாழ்க்கைத் திறன்

இடம்: இரண்டாம் இடம்

இப்பரிசு வழங்கப்பெறுகின்றது.

30.6.93 — திகதி

அதிபர்

அம்மா, இணுவில் - மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை

செங்கை ஆழியான் க. குணராசா

கமலம் பதிப்பகம்,
82, பிறவுன் வீதி,
நீராவியடி: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை
முதற்பதிப்பு: ஜனவரி, 1978 (வரதர் வெளியீடு)
இரண்டாம் பதிப்பு: 1991. யனவரி, 25.
அட்டைப் புகைப்படம்: சிசு. நாகேந்திரா
அச்சுப்பதிப்பு: சுவர்ணா அச்சகம் யாழ்ப்பாணம்.
(C) கமலா குணராசா, 82, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
விலை ரூபா............

- YAANAI — A Novel in Tamil by : Sengaiaaliyan (K. Kunarasa, B. A. Hons (Cey.) M. A., S L A S,)
- First Edition: Jan. 1978.
- Second Edition: 25. Jan. 1991.
- Cover Photo: Sisu. Nagendra.
- (C) Kamala Kunarasa, B. A. (Cey.) 82, Brown Road, Jaffna.
- Printers: Swarnah Printers, Jaffna.
- **Pages............**
- Published by: Kamalam Veeliyeedu, 82, Brown Road, Jaffna.

அட்டைப்படம்:

யானை சுடப்பட்ட இடத்திற்குச் செட்டிகுளம் காரியாதிகாரி (DRO) விசாரணைக்குச் சென்றபோது, சிசு. நாகேந்திரத்தால் பிடிக்கப்பட்ட புகைப்படம். இடமிருந்து வலமாக: முன் வரிசையில் இரண்டாவது நாடக நடிகர் ஏ. ரகுநாதன், மூன்றாவது ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்), நான்காவது, காரியாதிகாரி க. குணராசா (செங்கை ஆழியான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

செங்கை ஆழியானையும் அவரது நாவலாக்க ஆற்றலையும் நான் இன்று நேற்று அறிந்தவனல்லன்; இருபத்தைந்து வருடங்களாக அறிந்தவன். யாழ் - இந்துக்கல்லூரியில் சிறு வகுப்புகளில் சக மாணவனாகக் கல்வி கற்கும்போது, கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகளில்வரும் தொடர் நவீனங்களை ஆர்வத்துடன் வாசித்துவிட்டு, பின் அவற்றை அச்சஞ்சிகைகளிலிருந்து கழற்றி ஒன்று சேர்த்துப் புத்தகமாகக் கட்டும் பழக்கத்தையும், தான் படித்து இரசித்தவற்றை எங்களுக்குச் சொல்லி மகிழும் இரசனையையும் கண்டு வியப்பும் மகிழ்வும் அடைந்ததுண்டு.

பள்ளிப் பழக்கம் பல்கலைக்கழகம்வரை சென்றது. ஆனால் ஒருபடி முன்னேற்றம். இயற்கையாகவே எழுதும் ஆற்றல் மிகுந்த அவர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களையும் மாணவர்களையும் கவர்ந்தார். புவியியற் சிறப்புப் பட்டதாரி என்ற பட்டத்துடன் நின்றுவிடாது எழுத்துலகிலும் பட்டம் பெற்றார்.

அவரது நாவல்கள் அவர் எடுக்கும் பகைப்புலத்தாலும், கூறும் செய்தியாலும் தனித்து நிற்பவை அவரது நாவல்கள் தொழிலாளி பட்டாளிகளின் வாழ்க்கையுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் மையமாகவைத்து எழுதப்பட்டுள்ளன. கதைகளில் இடம்பெறும் பகைப்புலத்தை அக்குவேறு ஆணிவேராகக் கலையழகுடன் அலசி ஆராய்வார். கதாமாந்தர்களின் உரையாடல்களில் மண் வாசனை வீசும்.

அவரின் யானை என்ற இந்த நாவல் ஒரு புதுமையான படைப்பு, பழிவாங்குவதில் வல்லது யானை. அந்த யானையின் பழி வாங்கல் உணர்ச்சியிலும் மேலான பழிவாங்கல் உணர்ச்சி செங்காரனுடையது. அந்தளவிற்கு வந்தனாவை இழந்த அவனின் பிரிவுத் துயர் உணர்ச்சி பூர்வமாகவும் மிகநுட்பமாகவும் அவர் எழுத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் எழுத்துக்களில் அவரின் புவியியலறிவு அப்படியே பளிச்சிடுகின்றது. காட்டு வருணனைகளும் காட்டு விலங்குகள் பற்றிய குறிப்புகளும் இயற்கை யாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சூழல். இயற்கை யமைப்புப்போன்றவற்றை ஆசிரியர் திறம்பட எடுத்து விளக்கியுள்ளார். மிருகங்களின் நடத்தைகள், யானை களின் தடப்பாதைகள் என்பன மிகத் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஓர் எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய 'அவதானிப்பு' த்திறன் வியந்துரைக்கத் தக் கது. அவரின் அவதானிபபுத்திறனிற்கு எடுத்துக்காட்டு தம்பலகாமம் தொடக்கம், செட்டிகுளம் வரையுள்ள யானைகளின் தடப்பாதையில் நிகழும் காட்டின் செய்திகள் ஆகும். ஆசிரியரின் உரைநடை நெகிழ்ச்சி யானது; இடத்திற்கும் பாத்திரங்களுக்கும் ஏற்பநடை.

இறுதியாக இந்த நாவலைப் படித்து முடிந்ததும் என்மனதில் எஞ்சி நிற்கும் உணர்வு, செங்காரன் என்ற மனிதன் பழிவாங்கல் என்ற உணர்வினால் 'நொண்டி யானை'யின் நிலைக்கு இறங்கியிருப்பதும், இறந்துபோன யானை மனித நிலைக்கு உயர்ந்திருப் பதுமாகும். பழிவாங்கல் மனிதனை மிருக நிலைக்கு இறக்கிவிடுகின்றது என்பதை இந்த நாவல் சித்திரிக் கிறது, மனித குலத்திற்கு ஒவ்வாத பழிவாங்கல் உணர் வின் தீமையை ஆசிரியர் இந்த நாவலில் சுட்டி இருப் பதாக எனக்குப்படுகின்றது,

எழுத்துக்கள் சமூக மாற்றத்திற்கும், சமூக உயர்ச் சிக்கும் அடிப்படையாக அமைய வேண்டும், இப்பெரும் பொறுப்பைச் செங்கை ஆழியான் ஏற்று தன் எழுத் துக்களில் வெற்றி பெற்றுள்ளார்,

புவியியற் பேராசிரியர்,
புவியியற்றுறை,
பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்,
01-01-1991

பொ. பாலசுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாசத்தோடு கூடிய
கண்டிப்பாலும்,
நேசத்தோடு நிறைந்த
பேச்சாலும்
என்னுள்ளத்தில்
நிறைந்த 'சீனி அம்மான்'
அமரர் ஆ பொன்னுத்துரை
அவர்களின்
திருவடிகளுக்கு
இச்சிறு நூல்
காணிக்கை.

செ. ஆ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எனக்குத் தெரிந்தவற்றைச் சலிக்காமல் பிறருக்கு எடுத்துச் சொல்ல முயன்றதன் பிறிதொரு முயற்சியே "யானை" நாவலா கும், திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா — தம்பல காமம் பகுதியில் காரியாதிகாரியாகக் கடமையாற்றக் கிடைத்த அனுபவமும், செட்டிகுளம் — துணுக்காய்ப் பகுதிகளில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய அனுபவமும் சேர்ந்து யானைகளின் தடப்பாதைபற்றிய விபரங்களையும் காட்டின் பயங்கர அமைதி சூழ்ந்த அழகையும் இலக்கிய வடிவமாக்கத் தூண்டுதல்தந்தன. இத் தடப்பாதையில் 1971 / 1976-களில் வேட்டைக்காரருடன் இடைக்கிடையே பயணம் செய்த மறக் கவியலாத அனுபவங்களை இந்த நாவலில் தந்துள்ளேன்.

இயற்கை எவ்வளவு இனிமையானது?

தகவல்கள் மட்டும் நாவலாகாது என்பது எனக்குத் தெரிந் ததே; எனவே. உண்மை நிகழ்வொன்றைக் கலாபூர்வமாக இந்த நாவலில் பிணைத்துள்ளேன். இந்த நாவலைப் படிப்பதனால் புதியதொரு அனுபவம் உங்களுக்குக் கிடைத்தால், அதுவே இந்த நாவலின் சமூகப்பயனாகும்.

இந்த நாவலை மூதறிஞர் வரதர் முதலில் தனது வெளி யீடாக 1978 இல் வெளியிட்டார்; பன்னிரண்டு ஆண்டுகளுக் குப் பின்னர் இந்நாவல் பலரின் இடையறாத வேண்டுகோளின் பின்னர் இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்து எழுதி வருபவன் நான் என்பதை இங்கு எழுத்தாளர்களைக் கொச்சைப் படுத்த முயலும் சிலருக்கு நினைவு கூர்வதற்கு ஒரு தேவை இருக்கிறது.

இந்த நாவலுக்கு என்னினிய நண்பர் பேராசிரியர் பாலசுந் தரம்பிள்ளை தக்கதோர் முன்னுரை வழங்கியுள்ளார். அவருக்கு நன்றிகள்.

மேலதிக அரசாங்க அதிபர் (காணி)

கச்சேரி, கிளிநொச்சி.

01-01-1991

செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்று

காடே அதிரும்படி பெருங்குரலில் செங்காரன் கத்தினான்:

''உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்.''

அவன் அலறலைக் கேட்டுத் திடுக்கிட்ட செம்பருந் தொன்று பட்டமரக்கிளையிலிருந்து விர்ரென வானத்தில் கிளம்பியது. பாலைமரத்தின் உச்சாரக் கிளையில் அமர்ந்திருந்த குரங்குக் கூட்டம் ஒன்று திகிலுடன் கூச்சலிட்ட படி கிளை தாவியது.

குரங்குகளின் கிளை தாவிய சரசரப்பைக் கேட்ட செங் காரன் தலை நிமிர்ந்து பார்த்தான். பெரியதொரு குரங்கு அவனை உறுத்துப் பார்த்ததுடன் பற்களைக் காட்டி நையாண்டி செய்தது. அதன் பல் இழிப்பைப் பொறுக்க கூடிய நிலையில் அவன் இல்லை. வெறியுடன் தன் கரத்தில் இருந்த டபிள் பரல் துவக்கை தோளில் அணைத்து அக் குரங்கைக் குறிபார்த்தான். நிலைமையைத் தெரிந்து கொண்ட குரங்கு மறுகிளைக்குத் தாவியது. தாவிய நிலையிலேயே துப்பாக்கியிலிருந்து விடுபட்ட சன்னங்கள் அதன் அடி வயிற்றில் நுழைத்தன. வீரிட்டபடி அக்குரங்கு தலை குப்பற விழுந்தது.

துப்பாக்கியின் வெடிச்சத்தமும் குரங்கின் வீரிடலும் அக் காட்டின் அமைதியைக் குலைக்கப் போதுமானவையாக இருந்தன. அவனைச் சுற்றிப் பரபரப்பு ஒலிகள் எழுந்தன. யானைகள் சென்ற அப்பாதையின் நடுவில் அக்குரங்கு பரிதாபமாக இரத்தச் சேற்றில் குப்புறக்கிடந்தது. செங்காரன் வெகுநேரம் அதனைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

பாதையில் கிடப்பது குரங்கா? அவன் கண்களுக்கு யானையின் காலடியில் மிதிபட்டுக்கிடந்த அவன் வந்தனா.

அப்படியே நிலை குலைந்து போய் அவன் இருந்து விட்டான். பாதையில் யானைக்கூட்டம் ஒன்று சென்றிருப் பதற்கான காலடி அடையாளங்கள் தெரிந்தன. ஒரு காலடி மட்டும் இழுத்திழுத்துச் சென்றதற்கிணங்க சிதைந்து தெரிந்தது. அக்காலடியை அவன் வெறியோடு பார்த்தான்.

'உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன், பழி வாங்காமல் நான் ஒரு போதும் அழியமாட்டேன், வந்தனா, என் வந்தனா, உன்னை இழந்து விட்டேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காட்டுப் பாதையில் பிணமாகக் கிடந்த உன்னை இப் போது, நக்ரரில் வந்தவர்கள் தூக்கிச் சென்றிருப்பார்கள். உன் தந்தையிடம் உன்னைக் கொடுத்திருப்பார்கள். நிச்சயமாக உன் தந்தை வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்வார். வீட்டை விட்டு நேற்று வந்தவனுடன் ஓடிய உனக்கு இது வேணுந்தான் என்பார். உன் தாய் - பெற்றவள் - கதறிக் கதறி அழுவாள்.

நீ இறந்துவிட்டாயா, வந்தனா? உன்னை இனி நான் காணவே முடியாதா?

உச்சாரக் கொப்பரில் இருந்து குரங்கொன்று பரிதாபமாக அலறித் தவிப்பது தெரிந்தது. நிலத்தில் பிணமாகக் கிடக்கும் தன் இணையைப் பார்த்துப் பார்த்துத் தவித்தது. 'இப்படித்தான் நானும் தவிக்கின்றேன். என் தவிப்பு உனக்குப் புரிகிறதா? யாரையோ நினைந்து உன்னை ஏன்தான் சுட்டேன்? நொண்டி யன் யானை செய்த பழிக்கு உன்னை வஞ்சம் தீர்த்து என்ன பயன்?'

செங்காரன் எழுந்து நின்றான். கவலைகள் பெரும் சுமை யாக அவனை அழுத்தின. பாதையில் குப்புறக் கிடக்கும் குரங் கையும் மர உச்சியில் தவிக்கும் குரங்கையும் ஒரு கணம் ஏறிட் டுப் பார்த்துவிட்டு நடக்கத் தொடங்கினான். மனித காலடியே படாத காட்டுப் பாதை அது. யானைகள் தம் பருவ இடப் பெயர்ச்சிக்குப் பெயர்ந்து செல்ல வழக்கமாக உபயோகிக்கும் யானைப் பாதை. வருடத்திற்கு ஒரு தடவை அப்பாதையின் புற்களும் பற்றைகளும் யானைகளின் காலடியில் சிக்கி மடிந்து மண்ணோடு அழுத்தப்படும். 'எலிபன் கொறிடோர்' என்பது இதனைத்தான். அவனுடைய வந்தனாவை, மூன்று மணித்தி யாலங்களுக்கு முன்னர் பலிகொண்ட நொண்டியனைத் தேடி அவன் செல்கிறான். கூட்டத்தின் வேகத்திற்கு நடந்து செல்ல முடியாத நொண்டியன் பின்னால் ஒரு காலை இழுத்துச் சென் றிருப்பது பாதையில் நன்கு தெரிகிறது.

'வந்தனா, உன்னை அழித்த அந்த மிருகத்தை அழிக்காமல் நான் விடமாட்டன். அதற்குப் பிறகுதான் உன்னிடம் வருவன்.'

முறுக்கேறிய அவனுடலின் அரையில் சண்டிக்கட்டாக மடித் துக்கட்டிய சாறம். சாறத்தை இடுப்போடு கட்டி இறுக்கியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ரஜ் பெல்ட். அதன் மேல் அழுக்கடைந்த சேட். வலக்கரத்தில் துடபாக்கி. இடக் கரத்தில் ரோச் லைற் ஒன்று. மனதில் பழிவாங்கும் வெறி.

இதயம் அவளை எண்ணி எண்ணி ஓயாமல் அழுதது.

'உன்னை இனி எப்ப காணப்போறன் வந்தனா? உண்மைக் காதலுக்காக எல்லாவற்றையும் துறந்து இந்தப் பரதேசி பின்னால் ஓடிவந்தாயே? ஓடிவந்த உன்னை ஒரு ஐந்து மணி நேரம் கூட வைத்துக் காப்பாற்ற வக்கில்லாத நான். விதி இவ்வளவு கொடியதா, வந்தனா! நடுவழியில் உன்னை பலிகொடுத்து விட்டேனே? நொண்டியா! உனக்கு நான் என்ன கெடுதல் செய்தேன்? எதற்காக என் மனைவியை மிதித்துக் கொன்றாய்? உன்னில் காயத்தை உண்டாக்கியது நானா? மனிதரில் உள்ள ஆத்திரத்தைத் தீர்க்க ஒன்றுமறியாத என் வந்தனா தானா அகப்பட்டாள்? பாவி இரு. இரு. உன்னை, உன் உடம்பை சன்னங்களால் துளைக்காமல் விடமாட்டன். உன் இதயத்தைக் குண்டுகள் சல்லடையாகத் துளைக்கச் செய்யாமல் விடமாட்டன்.'

யானைகளின் காலடியில் அகப்பட்டு செடிகள் முறிந்து கிடந்தன. அவை நடந்து செல்லும் போது முறித்து எறிந்த கிளைகள் பாதையில் நிரம்பிக் கிடந்தன. யானைகள் முறித்துப் போட்ட கிளைகளை மேய்ந்து கொண்டிருந்த நான்கு மரைகள் செங்காரன் வருவதை மோப்பத்தால் அறிந்து விரைந்து ஓடி மறைந்தன. மரைகளின் காலடிச் சத்தங்கேட்டு அவன் முன்னால் பார்த்தான்.

சர்ரென முள்ளொன்று அவன் பெருவிரலில் ஏறியது. குனிந்து அதைப் பிடுங்கி எறிந்து விட்டு வானத்தைப் பார்த்தான். சூரியன் இன்னமும் உச்சிக்கு வரவில்லை. அப்படியே ஒரு மரத்தடியில் அமர்ந்தான்.

'ஓ என் வந்தனா? என் ஆசை வந்தனா!'

## இரண்டு

### நேற்று—

கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல்வெளி பரந்து விரிந்து கிடந்தது. முற்றி அறுவடைக்குத் தயாரான நெற் கதிர்கள் தலைப்பாரம் தாங்கமுடியாமல் ஒரு புறம் சாய்ந்து கிடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவின் பூரணமான ஒளித் தழுவலில் குளித்துக் கொண்டிருந்த வயல் மங்கையை, காவல் கொட்டிலில் அமர்ந்திருந்த செங்காரன் பிரமையுடன் பார்த்தான். காலம் தப்பிப் பெய்த மழையின் வெள்ள நீர் வயலில் நெற்பயிர்களின் அடியில் தேங்கிக் கிடந்தது. சில்லென வீசிய குளிர் காற்றின் உறைப்பைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை, இதயத்தில் பிரளயமாக சிந்தனைச் சிதறல்கள்.

தூரத்தில் தம்பலகாமம் சிவன்கோவில் கோபுரம் மங்கலாக இருள் வடிவில் தெரிகிறது. அவன் நினைவுகள், அக் கோயிலின் முன் கிண்ணியா நோக்கிச் செல்கின்ற பாதையில் அலைந்தன. இன்றுடன் அவன் கட்டிய மனக் கோட்டைகள் யாவும் தரை மட்டமாகிவிடும். அவள் இன்னொருவன் உடமையாகிவிடுவாள். நினைவே பெரும் பாரமாக இதயத்தை அழுத்தியது. கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

'வந்தனா, உன்னை நான் இழந்து விடுவேனா? பணத்தாலும் குலத்தாலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்வரை நாங்கள் ஒன்று சேர்வது நடக்கக்கூடியதுதானா? நீ மலையில் இருக்கிறாய்; நான் அடிவாரத்தில் இருக்கிறன். வந்தனா, நீ எனக்கு கூலி தரும் எசமானின் மகள்; நான் சாதாரண கூலிக்காரன். முரண்பட்ட வர்க்கத்தின் பிரதிநிதிகள் நாம். வந்தனா. வந்தனா! நீ என்மீது ஆசை கொண்டிருக்கக் கூடாது. முறையற்ற காதலை வளர்த்திருக்கக் கூடாது!'

செங்காரன், காவல் குடிலில், சம்புப் பரணில் அமர்ந்திருந்தான். மூன்று நீண்ட ஆண்டுகள். அவர்கள் இதயங்கள் காதலால் கட்டுண்டு மூன்று ஆண்டுகள். இன்றுடன் எல்லாம் சரி. நாளை மறுதினம் வந்தனா இன்னொருவன் மனைவியாகிவிடுவாள். தம் காதலை உரியவர்களிடம் எடுத்துச் சொல்கின்ற துணிச்சல் இருவருக்குமே இல்லை. நிச்சயமாக அங்கு கொலை ஒன்று விழும் என்பதை இருவரும் அறிந்திருந்தார்கள் அக்கிராமத்தில் பணத்தாலும் பதவியாலும் பெரிய மனிதரெனக் கணிக்கப்படும் ஒருவரின் மகளை, கேவலம் கூலிக்காரன் ஒருவன் மணந்து கொள்வதா? சமூகம் ஒத்துக்கொண்டாலும், நிச்சயம் வந்தனாவின் தந்தை ஒருக்காலும் ஒத்துக்கொள்ள மாட்டார்!

வயல் வெளியின் காட்டெல்லையில் சிறு சலசலப்பு எழுந்தது. செங்காரன் சலசலப்பெழுந்த திக்கை ஊன்றிப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றியாக இருக்குமோ? நேற்றிரவும் ஒரு பாத்தி நெற்கதிர்களைப் பன்றிகள் சப்பிவிட்டுச் சென்று விட்டன. செங்காரனின் வலது கரம் சப்தமின்றி பக்கத்தில் கிடந்த டபிள் பரல் துப்பாக்கியை எடுத்தது. அதில் தயாராகக் குண்டுகள் இடப்பட்டிருந்தன. துவக்கையும் காட்ரஜ்கள் நிறைந்த பெல்டையும் அவனிடம் இன்று மாலை கொடுக்கும் போது வந்தனாவின் தந்தை சொல்லித்தான் அனுப்பியிருந்தார்:

''செங்காரம், எப்படியாவது ராவுக்கு ஒரு பண்டிக்கு வெடி வைச்சுடு. நாளைக்கு முக்கியமான ஆக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வருகினம், வந்தனாவைப் பெண்பார்க்க. காலமை வரேக்கை பண்டியோட வந்திடு''

எடுத்த துப்பாக்கியை அவன் கரம் இருந்த இடத்திலேயே சலனமின்றி வைத்தது. காட்டெல்லையில் எழுந்த சலசலப்பு அடங்கி அமைதி நிலவியது. காட்டெல்லையில் வாடிக் காய்ந்து இலைகளின்றி எலும்புக்கூடாகக் காட்சி தந்த பாலைமரக் கொப்பொன்றில் அமர்ந்திருந்து, நிலவில் குளித்த கோட்டான் ஒன்று அமைதி குலைந்து 'விர்' ரென வானத்தில் கிளப்பியது. மரத் தடியில் ஏதோ பதுங்கி நிற்க வேண்டும் எனச் செங்காரன் எண்ணமிட்டுக் கொண்டான். காட்டின் குரல் அவனுக்குப் புதிதன்று

'வந்தனா, நீ இப்போது என்ன செய்வாய்? கண்ணீர் விடுவாயா? நம் காதலை வெளியில் சொல்லிக்கொள்ள முடியாமல் தவிப்பாயா? வந்தனா, உன்னை அடைய நான் ஆசைப்பட்டிருக்கக்கூடாது. நான் பயித்திக்காரன், வந்தனா'

காட்டெல்லையில் மீண்டும் சலசலப்பு. ஏதோ ஒரு மிருகம் வெள்ளத்தில் கால்களைப் புதைத்து நடக்கும் நீர்ச்சல சலப்பு. செங்காரன் கூன்றிப்பார்த்தான். 'ரோச்லையிற் அடித்துப் பார்ப்போமோ? பன்றியாக இருந்தால் வெடிக்குத் தப்பிவிடும். தப்பினால் என்ன? ஆருக்கு வேண்டும் பன்றியை?' செங்காரன் ரோச்லையிற்றை எடுத்து சலசலப்பு எழுந்த பக்கமாகப் பாய்ச்சினான். ஐந்து பற்றறி ரோச். ஒளிக்கதிர் நிலவொளியைப் பிளந்து கொண்டு காட்டெல்லையில் படிந்தது. ஒளித்திரள் படிந்த இடத்தில் இரண்டு கண்கள் இளஞ்சிவப்பாக மின்னின. கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான் என்பதை அவன் இனம் கண்டு கொண்டான். ஒளிப்பரவலில் கிளை பிரிந்த அதன் கொம்பரின் ஒரு பாகமும் தெரிந்தது. அது கலக்கத்துடன் கண்களை ஒளித்திரளிலிருந்து பிரிக்க முடியாமல் பார்த்துத் தயங்கி நின்றது. செங்காரனின் பழக்கப்பட்ட வலக்கரம் துப்பாக்கியைத் தன்னையறியாமல் எடுத்தது. கரத்தில் ஒரு தயக்கம். துப்பாக்கியை கப்புப் பரணில் வைத்துவிட்டு நிமிர ரோச் லையிற் பிடித்த இடக்கரத்தில் ஒரு சிறு பதட்டம். மானின் கண்களைக் கவ்வியிருந்த ஒளித்திரள் சற்று அசைந்தது. அவ்வளவு போதுமானது. கலைமான் வெருண்டு காட்டில் ஓரமாகத் தாவியது. செங்காரன் லையிற் ஒளியைக் காட்டோரமாகப் பாய்ச்சிப் பார்த்தான். ஐந்தாறு மான்கள் தாவிப் பாய்ந்து காட்டிற்குள் புகுவது தெரிந்தது.

அவனின் இன்றைய மனநிலையில் அவனால் எதுவும் செய்ய முடியாது. நேற்றாக இருந்திருந்தால் இந்நேரம் சேற்றுக் குழம்பில் அக்கலைமான் சரிந்து கிடந்து துடித்து உயிரை விட்டிருக்கும்.

மீண்டும் அவன் மனம் அலையெறிந்தது 'வந்தனா, நான் என்ன செய்யமுடியும்? இவ்வளவு விரைவில் உனக்குக் கலியாணம் முற்றாகும் என்று நான் எதிர்பார்கவில்லை. நீயும் எதிர் பார்த்திருக்க மாட்டாய் நம் காதல் எங்கள் மனதிற்குள்ளேயே சமாதியாகி விடவேண்டியதுதானா? உன்னை இழந்து எப்படி நான் வாழப் போகிறேன், வந்தனா?'

அவன் கண்கள் இருந்தாற்போல கலங்கின, அவன் திக்பிரமை பிடித்தவனாக நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தான்.

நிலவைச் சுற்றிப் பரிவட்டம் படர்ந்திருந்தது. நேரம் இரவு 2 மணி வரையில் இருக்கும். காட்டுப்பக்கமிருந்து நரிகளின் ஊளை இன்னமும் சிறிது நேரத்தில் ஆரம்பித்துவிடும். முழு நிலவின் மயக்கம் அவற்றிற்குத் தனிக்குஷியைத் தந்துவிடும்.

அவன் கண்கள் தம்மையறியாமல் சோர்ந்தன.

இருந்தாற்போல அவன் தூக்கம் கலைந்தது, தூரத்தில் இரண்டு ஆட்காட்டிக் குருவிகள் குரல் தந்து இரவின் அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கலைத்தன. செங்காரன் வயலை ஊடுருவிப்பார்த்தான். இருநூறு யார்களுக்கு அப்பால் வயலுக்கு நடுவில் பிரதான வீதியுடன் இணைந்திருக்கும் பாதையில் ஓர் உருவம் தெரிந்தது அவ்வுருவம் அவனிருந்த காவல் குடிலை நோக்கி விரைந்து ஓடி வந்தது. ஓரிடத்தில் வரம்பில் இடறி வரம்பின் சேற்றில் விழுந்து எழுந்து ஓடி வந்தது. சேலைத் தாவணி காற்றில் பறக்க — செங்காரன் வியப்புடன் பாய்ந்து எழுந்தான்.

"வந்தனா!"

அவன் தொண்டைக்குழிக்குள்ளேயே வார்த்தை அடங்கி விட்டது. வந்தலா தானா அது?

அவள் வெறிபிடித்தவள் போலப் பாய்ந்து காவற் குடிலுக்குள் புகுந்து தன்னை மறைத்துக்கொண்டாள், அவளால் சில வினாடிகள் எதுவும் பேச முடியவில்லை. வீட்டிலிருந்து இவ்வளவு தூரம் ஓடிவந்ததால் அவளுக்கு மூச்சிரைத்தது. அவனால் நம்ப முடியவில்லை. அவன் கனவு காண்கின்றானா?

"வாங்க கெதியாக வாங்க. எங்கேயாவது ஓடுவம். அவர்கள் எங்களைத் தேடுறதுக்கிடையில் எங்கயாவது ஓடிவிடுவம்" — அவள் விம்மி விம்மி அழுதாள்.

"வந்தனா? இதென்ன வேலை? ஒருவருக்கும் தெரியாமல் ஓடுவதா? இவ்வளவு காலமும் என்னை ஆதரித்தவருக்கு நான் துரோகம் செய்வதா?"

"என்னைப் பெத்து வளத்தவர்களையே விட்டுவிட்டு நீங்களே தஞ்சம் என்று ஓடிவந்திருக்கிறன். நீங்கள்" அவளால் தொடர்ந்து பேசமுடியவில்லை. கண்கள் மாலையாகக் கண்ணீர் சொரிந்தன! உங்களைத் தவிர இன்னொருத்தருடன் என்னால் வாழமுடியாது. என் இதயம் ஒன்றுதான். நினைவும் ஒன்று தான். எனக்கு நீங்கள்தான் வேண்டும். நேரம் கடத்தாதையுங்க— போயிடுவம்—"

அவன் மௌனமாகத் திக்பிரமை பிடித்துப்போய் நின்றிருந்தான். வந்தலாவின் துணிச்சல் —?

"காலமை எழுந்து என்னைத் தேடுவார்கள். 'என்னைத் தேடவேண்டாம். நான் விரும்பியவருடன் வாழச் செல்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேன்' என்று கடிதம் எழுதி வைத்துவிட்டுத்தான் வந்திருக்கிறன். விடியிறதுக்கிடையில எங்காவது போயிடுவம்.''

எங்கே செல்வது? மனிதர்கள் இல்லாத இடத்திற்கு ஓடி விட முடியுமா? வந்தனாவின் தந்தை எப்படியாவது அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பார். நிச்சயமாக கிடைப்பது மணமல்ல; மரணந்தான்!

அவன் மௌனம் அவளை ஏங்க வைத்தது.

''சாகிறதுக்குப் பயப்படுகிறியளா...'' என்று அவள் அவனை ஊடுருவிப் பார்த்தபடி கேட்டாள்.

''வந்தனா!'' என்றபடி அவன் அவளை வேகமாக அணைத்துக் கொண்டான்.

''சாகிறதுக்கு நான் பயப்பிடவில்லை வந்தனா. உன்னோடு சாகவும் நான் தயார். சாக நான் ஒருபோதும் பயப்படவில்லை. உன்னை எப்படி வாழவைப்பதென்றுதான் பயப்படுகிறன்.''

''வாழ்வதோ சாவதோ அது உங்களுடன்தான் என்ற முடிவுடன்தான் வந்திருக்கிறன். உடுத்த துணியுடன் உங்களிடம் வந்திருக்கிறன்''

''வேண்டாம் வந்தனா, நீ வாழவேண்டியவள் போயிடு, போயிடு''

அவள் அவன் அணைப்பிலிருந்து விலகி நின்றாள்.

''நீங்கள் இவ்வளவு கோழையா?''

''நான் இந்த விசயத்தில் கோழைதான் வந்தனா. நீதான் என்னை காதலிக்க வைத்தாய். எட்டாத பழம் என்றன், நீ கேட்டதில்லை, இப்போது நான் என்ன செய்வேன் வந்தனா, ஒருக்காலும் சமூகத்தைப் பகைத்துக் கொண்டு வாழ முடியாது, போயிடு',

அவன் அவளிடம் இரந்து கேட்டான்.

''போயிடுறன்.'' என்றாள் அவள் அமைதியாக: ''வீட்டுக்கல்ல''

''வந்தனா!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினாள்.

''பயப்படாதீர்கள், நான் மைனரல்ல, என் எண்ணப்படி நாம் கல்யாணம் செய்துகொள்ளலாம். எங்காவது போய் இரண்டு பேரும் வாழுவம் வாங்க.''

இனி யோசித்து முடிவு செய்வதற்கு எதுவுமில்லை. பெண் துணிந்த பின்பு, ஆண் கோழையாக இருப்பதா? எங்கு செல்வது?

''வவுனியாவுக்குப் போவம். அங்க தச்சன் குளத்தில எங்கட மாமி ஒருத்தி இருக்கிறா. நல்லவ. எங்கள் நிலையைப் புரிந்து சொல்லுவா. எங்களை ஏற்றுக்கொள்ளுவா.''

''எப்படி வந்தனா, போறது? றோட்டில் போக முடியாது எப்படியும் உன் தந்தை ஆக்களை விட்டுப் பிடித்து விடுவார். விடிந்ததும் நாலா பக்கத்திலும் ஆக்கள் விரைவார்கள். ஓடிவிட்டாய் என்று சும்மா கைகழுவி விட்டு இருக்கமாட்டினம். ஓடிவிட்ட மானத்தை எப்படியாவது பிடித்து இழுத்துப் பழிவாங்காமல் இருக்கமாட்டினம். பஸ் இல்லை றெயிலில்லை. எப்படி மறைந்து ஓடுவது''

''காட்டுக்குள்ளாலை போவம். உங்களுக்குத் தெரியாத காடா?''

''காட்டுக்குள்ளாலயா? உன்னால் வர முடியுமா? நடக்கத் தான் முடியுமா?''

''முடியும் என்னால் முடியும்!'' என்றாள் வந்தனா. அவள் முகத்தில் மலர்ச்சி அந்த நேரத்தில் தெரிந்தது. எவ்வளவு துணிச்சல்காரி!

அவன் வானத்தைப் பார்த்தான். தூரத்தில் நரிகள் ஊளையிட்டன. நள்ளிரவு இரண்டு மணி இருக்கும்;

''கெதியா வெளிக்கிடுங்க.''

செங்காரன் காட்ரஜ் பெல்டை இடுப்பில் கட்டிக்கொண்டான். சேட்டை எடுத்து அணிந்துகொண்டான். துப்பாக்கியையும் ரோச் லையிற்றையும் கரங்களில் எடுத்துக் கொண்டான். வந்தனா குடிலின் மூலையில் தொங்கிய பிளாஸ்ரிக் தண்ணீர்க் 'கானை' எடுத்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வவுனியா சென்றதும் இவற்றைத் திருப்பி அனுப்பி விடுவம்" என்றாள் அவள்.

வயல் வரம்புகளில் நடந்து வீதியில் ஏறினார்கள். வானத்தில் வௌவால்கள் சில பறந்து திரிந்தன.

அவள் அவனோடு இணைந்து நடந்து வந்தாள். வெகுநேரம் இருவரு ஒன்றும் பேசாமல் நடந்தனர். இருவரின் மனங்களிலும் போராட்ட அலைகள் கொந்தளித்தன. அக்காட்டுப் பாதையில் சோலையாக வளர்ந்திருந்த மரங்கள், நிலவின் கதிர்களை திட்டுத்திட்டாக நுழையவிட்டுக்கோலம் செய்திருந்தன.

"என்ன பேசாமல் வாறியள்?—" என்று வந்தனா கேட்டாள்.

"என்ன கேட்டாய், வந்தனா?—"

"என்ன பேசாமல் வாறியள் என்று கேட்டன்—"

"இனி எப்போதும் பேசிக்கொண்டிருக்கத்தான் போறம்—கெதியில் கிராமத்தை நாம் கடக்கவேணும், இன்னமும் அரைமைலில் ஒரு கிளைப் பாதை காட்டுக்குள் செல்கிறது — நக்ரார் பாதைதான். அது பன்குளத்திற்குச் செல்லுது. அதிலிருந்து பதினைந்து மைலில் பன்குளம். பன்குளத்தைக் கடந்து விட்டால் பிறகு பயமில்லை. காட்டுப்பாதையால் பதவியாவுக்குச் சென்றுவிடலாம். அங்கிருந்து வவுனியாவுக்குச் சென்றுவிடலாம். ... வந்தனா! செல்வச் செழிப்பெல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு இந்தப் பரதேசியுடன் வாறியே? நீ வாழ்ந்த வாழ்வில் ஒரு சிறு துகளையாவது நான் உனக்குத் தரமுடியுமா?—" வந்தனா எதுவும் பேசவில்லை. நடந்துகொண்டே அவன் கரத்தைப் பற்றிக்கொண்டாள். கரங்களின் அப் பற்றுதல் எவ்வளவோ விஷயங்களை அவனுக்குச் சொல்லியது. அப்படியே அவளை அணைத்துக்கொண்டு விரைந்து நடந்தான். சந்தடியற்ற அந்தப் பாதையின் அமைதியை அவர்களின் காலடிச் சத்தம்தான் கலைத்தது. சில்வண்டுகளின் ரீங்காரம் இடை இடையிடையே கேட்டது.

பாதையில் யானைகளின் லத்திக் கும்பங்கள் கிடந்தன. குறைந்தது ஐந்நாறு மணித்தியாலங்களுக்கு முன்னர் யானைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாதையில் நின்றிருக்கின்றன. அல்லது இப்பாதையைக் கடந்து வடபுறமாகச் சென்றிருக்கின்றன என்பதனை அவன் தெரிந்து கொண்டான்.

''யானைகள் நின்றிருக்குது —'' என்றாள் சற்று பயத்துடன் வந்தனா.

''பயமாக இருக்குதா? —''

''நீங்கள் இருக்கும்போது எனக்கென்ன பயம்? — நீங்கள் தம்பலகாமத்திலேயே பெரிய வேட்டைக்காரர் ஆயிற்றே? —''

''விரைந்துவா வந்தனா! விடிவதற்குள் நாம் பன் குளத்தைத் தாண்டிவிடவேணும்—''

அவர்கள் வடபுறமாகப் பிரிந்து காட்டுப் பாதையில் இறங்கி நடந்தனர். பாதையின் தொடக்கத்தில் சிலர் காடழித்து விட்டிருந்தார்கள். சில புலவுகளில் பொய்க்காடுகள் வளர்ந்து கிடந்தன.

பாதையின் குறுக்கில் ஏதோ நின்றிருந்தது. வந்தனா பயத்துடன் அவனைப் பற்றினாள்.

''நரிப்பிள்ளையள் ——'' என்றபடி அவன் ரோச் லைற்றைப் பாய்ச்சினான், ஒளிக்கதிருக்கு ஒரு கணம் கண் கொடுத்த இரு நரிகள் வாலைத் தொங்கவிட்டபடி பற்றைக்குள் நுழைந்து மறைந்தன.

'சோடியள் —'' என்றான் அவன். அவள் வெட்கத்துடன் சிரித்தாள். அவன் அவளை நெருக்கமாக அணைத்தபடி நடந்தான். இந்த இன்பத்தையா அவன் இழக்க இருந்தான்? அவர்கள் ஐந்து மைல்கள் வரையில் ஒரே வீச்சாக நடந்து வந்திருப்பார்கள்.

அவள் கால்கள் நொந்தன.

''சற்றுத் தங்கிப் போவமா—'' என்று கேட்டாள். அவன் அவளை இரக்கத்துடன் பார்த்தான்.

''இன்னமும் சற்றுத் தூரம் நடப்பம். வந்தனா''

''சரி —'' என்றாள் அவள். அவர்கள் காட்டுப் பாதையில் நடந்தார்கள். றக்ரரில் மண் அள்ளிச்செல்லும் பாதை அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டும் குழியுமாகக் கிடந்தது. விளிம்புகள் கூர்மையாகக் கால்களைக் குத்தின. அவள் அதனைக் காட்டிக் கொள்ளாது நடந்தாள்.

"இந்தப் பக்கமெல்லாம் நாங்க வேட்டைக்கு வந்திருக்கிறம், வந்தனா —"

மணல் வெட்டையொன்று பாதையின் இடது பக்கத்தில் இருந்தது. அவன் அவளை அங்கு அழைத்துச் சென்றான். நிலவொளியில் வெண்மணல் பிரகாசித்தது. பகல்போல இருந்தது.

"இங்க கொஞ்ச நேரம் இரு வந்தனா. — கொஞ்ச நேரந்தான் —"

அவள் மணலில் தொப்பென்றிருந்தாள். கால்களை அமுக்கிவிட்டுக்கொண்டாள்.

"நோகுதா வந்தனா—?" என்று கேட்டபடி அவன் அவள் அருகில் வந்து அமர்ந்தான். அவன் கரம் அவள் பாதங்களில் அழுத்தி வருடிவிட முயன்றது.

"ஐயையோ — வேண்டாம்." என்றபடி அவள் பாதங்களை இழுத்துக்கொண்டாள்,

## மூன்று

காட்டின் தனிமை. அவன் முன், அவள் வனமோகினியாக அமர்ந்திருக்கிறாள். அவளை அவன் உற்று ஆழமாகப் பார்த்தான். கருமை பூத்த அவள் முகத்தில் செம்மை படர்ந்தது தலை குனிந்து கொண்டாள். கறுப்பிலும் அவள் —. "வந்தனா —" என்றபடி அவன் அவளுடைய கரத்தைப் பற்றினான். அவள் தடுக்கவில்லை. அப்படியே இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். மூச்சுக் காற்றுக்கள் ஒருவரை ஒருவர் சுட்டன.

அவன் கழுத்துப் புறத்தில் அவள் முகம் புதைத்துக்கொண்டாள். அவள் கன்னக் கதுப்புகள் அவன் கழுத்தில் படிந்தன. அவள் அவன் முதுகை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள் அவள் முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். நிலவின் ஒளி அவள் முகத்தில் பாலாகப் பாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வந்தனா—"

"—ம்—"

அவன் பார்வையில் தொனித்த தொனிப்பை அவள் கண்டு கொண்டாள். வெள்ளம் அணையுடைத்து விட்டது. தூரத்தில் யானையொன்று பிளிறும் ஒலி மங்கலாகத் தேய்ந்து ஒலித்தது. அந்த ஒலி அவனைச் சுய நினைவுக்கு வரவைத்தது.

"வா, வந்தனா. நாம் செல்ல வேண்டிய பாதை நீண்டது—" அவள் கரம்பற்றி அழைத்தான். அவள் எழுந்தாள். அவர்கள் வெட்டையை விட்டு பாதையில் ஏறினர். காட்டு முயல் ஒன்று வெருண்டு புதருள் மறைந்தது: "வந்தனா' என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம்—"

"உங்களால் எனக்கு ஒரு கஷ்டமுமில்லை, என்னால்தான் உங்களுக்குக் கஷ்டம். நிம்மதியாக இருந்த உங்களை நான் வற்புறுத்தினன். நான்தான் முதன்முதல் என் காதலை வெளியிட்டன்—"

"உன்னை என்று கண்டேனோ அன்றே நானும் என்னை இழந்து விட்டன், வந்தனா!—" என்றபடி அவன் அவள் தோளில் கரம் பதித்து தன்னுடன் நெருக்கமாக அணைத்துக் கொண்டான். அவனது வலிய கர அணைப்பில் அவள் மயங்கி நடந்தாள். காலமெல்லாம் இனி இப்படியே அவனுடன் நடக்கப்போகிறாள்.

அவர்கள் சென்ற காட்டுப்பாதையில் சிற்றாறு ஒன்று குறுக்கிட்டது. குச்சவெளிக்கும் கும்புறுப்பிட்டிக்கும் இடையில் கடலில் கலக்கும் ஆற்றின் கிளை அது. கிளையாற்றில் பாலம் மூடும் அளவிற்குத் தண்ணீர் பாய்ந்தது. கிளையாற்றைக் கடப்பதற்குப் பாலமில்லை. பள்ளத்தில் இறங்கி நடந்துதான் கடக்கவேண்டும். அவர்கள் இருவரும் கிளையாற்றின் பள்ளத் தாக்கில் இறங்கினர். அவர்கள் இறங்கிய சத்தம், காட்டில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. சிற்றாற்றில் நீர் குடித்துக் கொண்டிருந்த மிருகங்கள் சில வெருட்சியுற்று புதர்களுள் மறைந்தன.

அவர்கள் சிற்றாற்றைக் கடந்து பாதையில் ஏறி நடந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் பன்குளத்தையடைய ஐந்துமைல் வரையில் தான் இருக்கும். வந்தனா, கெதியா நடந்தால் விடிவதற்குள் பன்குளத்தைத் தாண்டிவிடலாம்."

துப்பாக்கியையும் ரோச் லைற்றையும் இடக்சரத்தில் மாற்றிக் கொண்டவன், வலக்கரத்தால் அவள் மெல்லிடையைப் பற்றித் தன்னுடன் இழுத்துக்கொண்டான். அப்படியே குனிந்து அவள் காதருகில் "வந்தனா" என்றான். அவளுக்குச் சிரிப்பாகவும் சுவையாகவும் இருந்தது.

"கொஞ்சம் பொறுத்திருங்கள்" என்றாள் வந்தனா,

கல் தடுக்கி அவள் விழப்போனாள். அவன் அப்படியே அவளைத் தாங்கிக்கொண்டான்.

தூரத்தில் பற்றைகள், மரங்கள் முறிகின்ற சத்தம் இருந்தாற்போல எழுந்தது. அவன் வந்தனாவின் கரத்தைப்பற்றி இழுத்து நிறுத்தினான். சற்றுநேரம் காதுகளைக் கூர்மையாக்கி உற்றுக் கேட்டான். புதர்கள் துவம்சமாகும் சத்தமும் மரக்கிளைகள் முறியும் சத்தமும் வரவர நெருங்கிக்கேட்டன. "என்ன?" என்று அவள் பயத்துடன் கேட்டாள்.

'யானையள்!' என்றான் அவன் மெதுவாக. "பயப்படாதே வந்தனா. அவை மேய்ச்சல் முடிந்து திரும்பிக்கொண்டிருக்கின்றன. இந்தக் காட்டுப்பாதையை அவை கடக்கலாம். சத்தத்திலிருந்து அவை சற்றுத் தூரத்தில் ... அதோபார்!' அவளை அப்படியே ஒருமரத்தின் பின்னால் இழுத்துக் கொண்டு அவன் மறைந்தான். இவர்கள் மெதுவாக எட்டிப்பார்த்தனர். வந்தனாவின் உடல் மெதுவாக நடுங்கியது. அவன் அவளை அணைத்துப்பிடித்தான்: "பயப்படாதே அவை ஒரு கூட்டம். பயமில்லை. தனியன் என்றால்தான் பயம்."

அவர்கள் மறைந்திருந்த இடத்திலிருந்து நூறு யாருக்கு முன்னால் யானைக்கூட்டம் ஒன்று. இடது பக்கக் காட்டிலிருந்து வெளிப்பட்டு பாதையில் ஏறிய யானையின் உருவம் பார்ப்போரைக் கலங்கவைத்துவிடும். அவ்வளவு தூரம் அதன் பருமனும் உயரமும் இருந்தன. அப்படி ஒரு பெரிய உருவத்தை அவன் கூட இவ்வளவு காலமும் காணவில்லை. கரிய மலைக்குன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலப் பாதையில் ஏறிச் சற்றுத் தயங்கி நின்றது. அது தன் காதுகளை வீசி அடித்துக்கொண்ட சத்தம் படபடவெனக் கேட்டது.

வந்தனா பயத்தால் நடுங்கினாள். குளிரில் உதறுவதுபோல அவள் உடல் பதறியது. அவள் இறுக்கமாக அவனை அணைத்துப் பிடித்தாள்

"பயப்படாதே, வந்தனா நானிருக்கிறன். துவக்கிருக்குது."

முதலில் ஏறிய யானை ஒருகணம் சீறிவிட்டு பாதையைக் கடந்து காட்டுக்குள் நுழைந்தது. அதனைத் தொடர்ந்து பெரிதும் சிறிதுமாக ஏறத்தாழ நாற்பது யானைகள் வரை சென்று மறைந்தன. குன்றுகள் பெரிதும் சிறிதுமாக அசைந்து செல்வது போல அவை இவர்களுக்குத் தெரிந்தன அவை செல்கின்ற சத்தம் தூரத்தில் கேட்டது.

"அப்பாடா" பாதை வெறிச்சிட்டுக்கிடந்தது.

'இவையள் இடம் பெயருகினம் போல இருக்குது வந்தனா. ஒவ்வொரு பருவத்திற்கு ஒவ்வொரு இடத்திற்குப் போவினம். குறித்த பாதையில, குறித்த இடத்துக்கு, குறித்த காலத்துக்கு இவையள் போவினம். ஒரே சுற்றுலாத்தான்" என்று சிரித்தான் செங்காரன்.

மரத்தில் சாய்ந்திருந்தாள் அவள், அவன் அவளை அணைத்திருப்பது தெரிந்தது. பயம் நீங்கிய உடம்புகள் இப்போது தம் நிலையை அறிந்தன. அப்படியே அவளைத் தன் மார்புடன் இறுக்கமாகக் கட்டிக்கொண்டான் அவன். வெம்மையான உதடுகள் தழுவிப் பிரிந்தன.

"போதும், போதும், போவம்." முதலில் அவள் தான் சுயநினைவுடன் பேசினாள்.

அணைப்பு விலகியது. இருவரும் பாதையில் ஏறினர்.

"யானையள் நிக்குமா?"

'அதெல்லாம் போயிட்டுது"

வானத்தின் நிலவை முகில் ஒன்று மூடியது. பாதையில் ஒளி மறைந்தது ஒரு சில விநாடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நடந்தார்கள். அவன் அவளை அணைத்தபடி நடந்தான் நடையில் அவசரமும் வேகமும் தெரிந்தன. அவர்கள், யானைகள் பாதையைக் கடந்த இடத்தை நெருங்கினர். இரவுப் பறவையொன்று மரத்திலிருந்து விர்ரெனக் கிளம்பியது. அலறியபடி அவள் திடுக்கிட்டு நின்றாள்.

''ஐயோ'' என்று வீரிட்டலறினாள் வந்தனா, அவனுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை, நிலத்திலிருந்து இருவரும் பத்தடி உயரத்துக்கு தூக்கப்பட்டனர், சிறல் ஒலியுடன் ஒரு வீசல்!

பாதையின் ஓரத்தில் பெரியதொரு யானை நின்றிருந்ததை அவர்கள் காணவில்லை. அணைப்பின் சுகத்துடன் நடந்து வந்த இருவரையும் தன் துதிக்கையால் ஒருங்கே சேர்த்து கணப்பொழுதில் அந்த யானை தூக்கி வீசியது.

செங்காரன் பத்து யாருக்கு அப்பால் போய் புதருள் விழுந்தான் அவன் கரத்திலிருந்த துப்பாக்கியும் ரோச் லைற்றும் சிதறி எங்கோ விழுந்தன.

''வந்தனா!'' என்று செங்காரன் அலறினான்.

''ஐயோ அம்மா'' என்ற பரிதாப ஒலி எழுந்தது. செங்காரன் தன் நோவையும் பார்க்காது பாய்ந்து எழுந்தான். பாதையில் பயங்கரச் சீறலுடன் அந்த யானை நின்றிருந்தது. அது தன் முன் காலைத் தூக்கி,

''ஐயோ வந்தனா!'' என்று வீரிட்டான் அவன்.

''அம்மா ஆ'' என்ற குரல் தேய்ந்து அழிந்தது. தூக்கிய வலது உரக்காலை யானை கோபத்துடன் வந்தனாவின் மார்பில் பதித்தது. பின்னர் பந்தாடுவது போல காலால் அவளை ஒரு எற்றி எற்றிவிட்டது.

''ஐயோ'' என்று கத்தினான் செங்காரன். யானை சீறலுடன் அவன்பக்கம் திரும்பியது.

அவன் கரத்திலிருந்த துவக்கு எங்கே? சற்றுத் தூரத்தில் ரோச்லைற் கிடப்பது தெரிந்தது. அதனைப் பாய்ந்து எடுத்துக்கொண்டான். ரோச்சின் ஒளிக் கதிர்கள் யானையை நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிப் பாய்ந்தன. அவனை நோக்கி வந்த யானை சிறலுடன் தயங்கி நின்றது பின்னர் வலப்பக்கமாகக் காட்டுக்குள் இறங்கியது. பின்கால் ஒன்றை அது மெதுவாக இழுத்து இழுத்து நடந்தது. எவரோ வெடி வைத்தகாயம். அதனால்தான் யானைக் கூட்டத்திலிருந்து அது பின் வாங்கியிருக்கிறது. தன் கூட்டம் முன்னால் செல்ல அது வெகுநேரம் பிந்தித் தொடர்கிறது.

செங்காரன் வந்தனா கிடந்த இடத்திற்கு ஓடிவந்தான். அவள், வந்தனா, அவனை நம்பி பெற்றார் உற்றார் யாவரையும் வெறுத்துவந்த வந்தனா, அவனுடன் புது வாழ்வு வாழ வந்த வந்தனா, காட்டுப் பாதையில் அநியாயமாகக் கொல்லப் பட்டு இரத்தச் சேற்றில் பிணமாகக் கிடந்தாள். "ஐயோ" என்று தலையில் அடித்துக்கொண்டு செங்காரன் வெகு நேரம் தன்நினைவற்று அழுதுகொண்டிருந்தான்.

"வந்தனா, என் வந்தனா."

திடீரெனத் தலையை உயர்த்திப் பார்த்தான். யானைகள் சென்ற பாதை அப்படியே தெளிவாகத் தெரிந்தது. பற்றைகள், புதர்கள் எல்லாம் நிலத்தோடு அரைந்து பாதை நீண்டு கிடந்தது.

"உன்னை இனி விடமாட்டன். உன்னை உயிரோடு விடமாட்டன்." அவன் பாய்ந்து எழுந்தான். அவன் துப்பாக்கி எங்கே? இதயம் அழுதது. பழிவெறி பூதாகாரமாக வளர்ந்து நின்றது.

## நான்கு

செங்காரன், அவளைப் பறிகொடுத்து அரைநாள் கழிந்து விட்டது. இப்போது தம்பலகாமத்தில் யானையால் அடியுண்டு இறந்த வந்தனாவைப் பற்றித்தான் பேச்சாக இருக்கும். சென்ற ஆண்டு வேட்டைக்குப்போன பெரிய சாமியும் யானையால் இறந்திருக்கிறான். அவன் பிரேதத்தைக் கண்கொண்டு பார்க்க முடியாது. அவனைத் தூக்கி வீசிய அவியன், தன் முன்னங் காலால் அவன் தலையை நசித்து கூழாக்கிவிட்டது.

வந்தனா இறந்துபோன நிலையிலும் உருக்குலையாமல் கிடந் தாள். அவள் மார்பில் ஏற்பட்ட மிதிப்பு அவள் உயிரைக் குடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. யானை அவளைக் காலால் எற்றிவிடும் போதுகூட, அதன் காலில் அவள் தலை அகப்படவில்லை. 'பிரேமையும் எழிலும் நிறைந்த என் வந்தனாவின் முகத்தை நான் இனி எப்போது காணப்போகின்றேன்? அடபாவி, இப்படி அநியாயமாக என் வந்தனாவை அடித்துக்கொன்று விட்டாயே? நீ மட்டும் நிம்மதியாக இருக்கலாம் என்றா எண்ணுகிறாய்! அப்படி எண்ணாதை. உன்னை முடிக்குமட்டும் எனக்கு இனி உறக்கமில்லை!'

தம்பலகாமத்திற்கும் கொறவுப்பொத்தானைக்கும் இடைப்பட்ட காடு அடர்த்தியும் செழிப்பும் பயங்கரமும் நிறைந்தது. உயர் மரங்கள் வானளாவி வளர்ந்திருக்க, கொடிகள் பின்னிப் படர்ந்திருந்தன. அடிக்காடு நெருக்கமான கீழ்நில வளரிகளைக் கொண்டிருந்தது. காட்டுப்புறாவொன்று எச்சரிக்கைக் குரல் தந்தபடி மரத்திலிருந்து கிளம்பியது. காட்டின் செய்தியை அவன் அறியாதவனல்லன். சுற்றாடலில் ஏதோ ஒரு பகைமை விலங்கை அது கண்டிருக்க வேண்டும் அல்லது அவனைத்தான் கண்டிருக்க வேண்டும்.

அவன் எழுந்து நின்றான். வந்தனாவின் பிரிவுதந்த ஏக்கம் அவனைக் கவிந்து மூடிக்கொண்டது. அப்படியே துவக்கை நிலத்தில் ஊன்றியபடி சற்று நேரம் மரமாக நின்றிருந்தான். பொலபொலவெனக் கண்கள் நீரைச் சிந்தின. குமுறிக் கொண்டு அழுகை வெடித்தது.

'ஐயோ என் வந்தனா, வந்தனா.''

மறுகணம் பேயாக அவன் இதயத்தில் பழி உணர்வு தலை தூக்கியது: 'உன்னை விடமாட்டன் நீ எங்கு ஓடினாலும் உன்னை விடமாட்டன்!'

துவக்கை அலட்சியமாக வலக்கரத்தில் தூக்கிக் கொண்டான். மறுகரத்தில் ரோச் லையிற்

யானைகள் சென்ற தடத்தில் விரைந்து நடக்கத் தொடங்கினான். அவன் எந்தத் திசையில் செல்கிறான், எங்கு செல்கிறான் என்பதைப் பொறுத்து ஒன்றும் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஒன்று மட்டும் அவனுக்குத் தெரிந்தது. நிச்சயமாக அவன் நொண்டியனைத் தனியாக அல்லது கூட்டத்துடன் சந்திப்பான். பழி தீர்த்துக் கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடை நீண்டது. காட்டின் குளிர்ச்சியில் வெம்மை தெரிய வில்லை. நாக்கு வரளத் தொடங்கியது.

காட்டில் வாழும் யானைகள், பொதுவாக முப்பது யானை யிலிருந்து ஐம்பது யானைவரை கூட்டமாகத்தான் வசித்து வருகின்றன. உணவைத்தேடி அவை நீண்டதூரம் செல்லும் இயல்பின. ஓராண்டில் அவை கடக்கின்ற தூரம் பல நூறு மைல்களாகும். மூங்கில் காடுகளில் அதிகமாகத் திரிகின்ற யானை கள் புல்நிலங்களிலும் அதிகளவு நேரத்தைச் செலவிடுகின்றன. அவை வாரத்திற்கு வாரம் ஓரிடத்திற்கு நிலையாக நிற்காமல் இடம் பெயர்ந்து கொண்டேயிருக்கும். ஓரிடத்தில் இருக்கின்ற மூங்கில், புற்கள், இலை குழைகள் என்பனவற்றின் அளவையும் கால நிலையையும் பொறுத்து அவை ஓரிடத்தில் தங்கி நிற்கின்ற கால அளவு அமையும், காலத்திற்குக் காலம் அவை செல்கிற இடமும் பாதையும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மாறு வதில்லை. என்ன காலத்தில் எந்தவிடத்தில் தாம் வாழத்தகுதி யான நிலைமை இருக்கும் என்பதை யானைகள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றன.

செங்காரனுக்கும் யானைகள் பற்றி ஓரளவு தெரிந்திருந்தது. காட்டிலும் காட்டின் சூழலிலும் வாழ்கின்ற ஒருவனுக்கு இவை தெரியாமல் இருக்க நியாயமில்லை, ஒருவன் தான் புதிதாக வெட்டி தோட்டம் செய்த புலவில் யானைகள் புகுந்துவிட்டன என்றால் அது யானைகளின் தவறில்லை. அவை செல்கின்ற வழக்கமான பழகிய பாதையில் காடு வெட்டியதுதான் தவறு.

சூரியன் உச்சியில் தெரிந்தான். அவனுக்குப் பசியெடுக்க வில்லை. நாக்குத்தான் வரளத் தொடங்கியது. பழிவாங்கும் உணர்ச்சி அவனை உந்தித்தள்ள, நடந்து சென்றான்.

ஒரு மணியளவில் நீர் சலசலத்து ஓடுகின்ற ஒலி கேட்டது. அவனுக்குச் சற்றுமுன்பாக காடைகள் சில பள்ளத்தாக்கில் இறங் குவதைக் கண்டான். அப்பள்ளத்தில் நீர் இருக்க வேண்டும். நீர்ப்பறவை ஒன்றும் அப்பள்ளத்திலிருந்து மேலெழுந்தது.

செங்காரன் அவ்விடத்திற்கு விரைந்து சென்றான். தாகத் தினால் ஏற்பட்ட நாக்குவரட்சி, விரைந்து செல்ல அவனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டியது. உண்மையில் அப்பள்ளத்தில் ஒரு சிற்றாறு சொற்ப நீருடன் கிழக்குப் புறமாக ஓடிக்கொண்டிருந்தது. பன்குளத்தை அடுத்து ஓடுகின்ற ஆறு இதுதானோ?

சிற்றாறு பத்தடி பள்ளத்தில்தான் ஓடியது. அப்பள்ளத்தில் யானைகள் இறங்கி ஏறிச் சென்றிருக்கும் காலடித்தடங்கள் தெளிவாகத் தெரிந்தன. பெரிதும் சிறிதுமான காலடையாளங்கள். ஒரு காலடி அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. முன்பாதங்கள் தெளிவாகப் பதிந்திருந்தன, சேற்றில் ஐந்து விரல்களின் குவிவளவு கூடத் தெளிவாகத் தெரிந்தது. பின்னங்கால்களில் ஒன்று நான்கு விரல்களுடன் தெளிவாகப் பதிந்திருந்தது. ஒரு பாதம் இயல்பாகத் தூக்கி வைக்காமையால் சேற்றில் இழுபட்டுச் சிதைந்திருந்தது. அதனை செங்காரன் அடங்கா வெறுப்புடன் பார்த்தான். அவன் இதயத்தை ஆவேசம் தகர்த்து விடும்போல இருந்தது. 'வந்தனா' என்று முணுமுணுத்தான்: 'உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்!'

சிற்றாற்றின் கரையில் லத்திக் கும்பங்கள் கிடந்தன. அவன் அவற்றின் மீது கால் வைத்துப் பார்த்தான். லத்தியின் சூடு இன்னமும் ஆறவில்லை. ஒருமணி அல்லது இரண்டு மணி நேரத்திற்கு முன்னர்தான் அவை இங்கிருந்து அகன்றிருக்க வேண்டும்.

நொண்டியனின் பாதச் சுவடு அவனுள் மூட்டிவிட்ட ஆத்திரத்தில் அவனுக்கு வரட்சி தெரியவில்லை. யானைகளின் காலடி பட்டு சிற்றாற்று நீர் கலங்கி இருந்தது. அதனால் சிற்றாற்றின் வருகைப் பக்கமாகச் சில தூரம் நடந்து சென்று கைகளினால் வாரி அள்ளி நீரைக் குடித்தான். தெள்ளிய அந்த நீரில் வெயிலின் ஒளி தெறித்தது. நீரைக் குடித்ததும், அவன் இதயத்து உணர்ச்சிகள் சிறிது அடங்கியது போல இருந்தது. அச்சிற்றாற்றின் கரையில் சற்று அமர்ந்து கொண்டான்.

வந்தனாவை நொண்டியன் ஏன் கொன்றது? செங்காரன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அதற்கு மதம் பிடித்து விட்டதா? அப்படியிருக்காது. மதம் பிடித்திருந்தால் அது தன் கூட்டத்தோடு செல்ல நியாயமில்லை. மனிதரை அது வெறுக்கிறதா? அதன் பின்னங்காலில் வெடி தைத்து ரணமாகியிருக்கும் காயத்திற்கு மனிதர் தான் காரணம் என்று நம்புகிறதா? அப்படியும் இருக்காது. காயத்திற்குக் காரணம் துப்பாக்கி ரவை தான் என்பதை அது புரிந்திருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்துப் பார்த்தால் காரணம் புரியத்தான் செய்யும். யானைக்கூட்டத்துடன் அதே வேகத்தில் செல்லக்கூடிய வலிமை நொண்டியனுக்கு இருக்கவில்லை. அதனால் அது மெதுவாகத் தான் தன் கூட்டத்தைத் தொடர்ந்து வந்திருக்கிறது. யானைகள் எல்லாம் பாதையைக் கடந்துவிட்டன என்று தப்பாக நினைத்து அவனும் வந்தனாவும் வர, அதே வேளை நொண்டியனும் பாதையில் ஏற, யானைகள் பொதுவாகத் திடீரெனத் திடுக்கிடுவதை விரும்புவதில்லை. நட்ட நடுநிசியில் தன் பாதையின் குறுக்கே வந்து தோன்றிய இரு மனிதர்களின் நிழலாட்டம் நொண்டியனுக்குத் திடுக்காட்டத்தைக் கொடுத்திருக்குமோ? உணர்வதற்கு முதலே—'வந்தனா என் வந்தனா உன்னை இழந்துவிட்டேனே? இப்போது உன் வீட்டில் இனசனம் குழுமியிருந்து ஒப்பாரி வைக்கும். என்னை எல்லோரும் திட்டித் தீர்ப்பார்கள். பறைமேளம் முழுங்கும். வந்தனா வந்தனா.'

## ஐந்து

காலை வேளை. செங்காரன் கிணற்றில் நீரை அள்ளித் தொட்டியை நிரப்பிக் கொண்டிருந்தான். அவன் அந்த வீட்டிற்கு வேலையாளாக வந்து ஓராண்டு கழிந்துவிட்டது. வந்தனாவின் வீட்டிலுள்ளோர் எவரும் அவனை வேலையாளாக மதிக்கவில்லை. அவன் அந்த வீட்டின் ஒரு அங்கத்தினன். செங்காரன் இல்லாவிட்டால் அவ்வீட்டில் எந்தவொரு அலுவலும் நடக்காது போல அவன் முக்கியத்துவம் பெற்றிருந்தான்.

கடைக்குப் போக வேண்டுமா? வயலுக்குப் போக வேண்டுமா? வந்தனாவை திருகோணமலைக்குக் கூட்டிச் செல்ல வேண்டுமா? எல்லாவற்றுக்கும் அவன்தான்! கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருக்கும்போது, வந்தனா குடத்துடன் கிணற்றடிக்கு வந்தாள், ''தண்ணீர்—'' என்றபடி குடத்தைக் கிணற்றின் கட்டில் வைத்தாள். அவன் வாளியை உன்னி எடுக்கும்போது அவனது வெறுந்தேகத்தின் முறுக்கை அவள் கண்கள் பார்த்தன. 'எவ்வளவு வாளிப்பான, பலமான தேகம்!

''தண்ணி நிரப்பியாச்சு —— போகலாம்—'' என்றான் சிரித்தபடி செங்காரன். அவள் அவனைப் பொய்கோபத்துடன் பார்த்து விட்டுச்சென்றாள். இடுப்பில் குடம் ஏற இடையை ஒரு புறம் சரித்து அவள் நடக்கின்ற அழகு ஒரு கணம் அவனைக் கவ்வியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொட்டியில் நீர் நிரப்பிவிட்டு மாட்டுப்பட்டிக்குச் செல்வான். பால் கறக்கவேண்டிய மாடுகளில் பாலைக்கறந்து விட்டு, பட்டியைத்திறந்து மாடுகளை மேய்ச்சலிற்குத் துரத்தி விடுவான். அதேவேளை சிறியதொரு பால் செம்புடன் வந்தனா பட்டிக்கு வருவாள். அவனையே பார்த்துக்கொண்டு நிற்பாள்.

''வந்தனா, நீ கெதியில் என்னை வீட்டை விட்டுத் துரத்தப்போறாய்!—''

''ஏன்?—''

''என்னைச்சுற்றிச் சுற்றித்திரிவதை உன் அப்பர் கண்டால் வேறு வினையே வேண்டாம்.''

''இங்க அப்படித் தவறு நினைக்கமாட்டினம்—''

''நான் உங்க வீட்டு வேலையாள்—''

அவள் மிகுந்த சினத்துடன் அவனைப் பார்ப்பாள்.

''இனிமேல் இப்படிச் சொன்னால் ஒருக்காலும் பேச மாட்டன்—''

''சரி வந்தனா, செம்பைத்தா!'' —செம்பை வாங்கி பாலை நிரப்பிக் கொடுத்துவிட்டு மிகுதியைத் தூக்கிக்கொண்டு அடுக்களைக்குச் செல்வான். பாலை அண்டாவில் ஊற்றிவிட்டு வெளியே வருவான். வண்டி மாடுகளை இடம்மாற்றிக் கட்டி வைக்கல் இழுத்துப் போட்டுவிட்டு திண்ணைக்கு வருவான்.

வந்தனா தேநீர் கொண்டுவந்து அவன் அருகில் வைப்பாள்.

அவன் வயலுக்குப் புறப்படுவான். மத்தியானம் திரும்பி வருவான்.

''வயலுக்குப் போனால், கெதியாக வரத்தெரியாது—'' என்று கோபிப்பாள் வந்தனா. அவன் அவளைப் பார்த்துச் சிரிப்பாள்.

''சிரித்தது போதும் போய்ச் சாப்பிடுங்கோ.''

''வந்தனா——''

''என்ன;''

''இப்பவே இப்படி என்றால்...?''

''பிறகு எப்படி என்று பாருங்களேன்.'' என்றபடி இவள் உள்ளே செல்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அன்பு வீட்டிலிருந்த எவருக்கும் தெரியவில்லை. அது இப்படிக் காதலாக வளர்ந்து நிற்கும் என்றோ, எல்லா வற்றையும் துறந்து அவன் பின்னால் அவளை ஓட வைக்கும் என்றோ எவரும் கனவில் கூட எண்ணியிருக்க மாட்டார்கள்.

❁

அவன் குமுறிக் குமுறி அழுதான்: 'வந்தனா — எப்படியடி என்னைத் தவிக்க விட்டிட்டு நீ பறந்தோடினாய்? நீயில்லாத இந்த உலகம் எனக்கேன்?——' விம்மிவிம்மி அழுகின்ற அவனை வியப்புடன் ஆற்றுமந்தியொன்று பார்த்தது. சலசலத்தோடும் சிற்றாற்றின் அழகையும் அமைதியையும் அவன் அழுகை சிரழிக்கிறது என எண்ணியதோ? அவன் வெகுநேரம் அழுதான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த ஆற்றுமந்திக்குப் பொறுமை அழிந்தது. ஒருதடவை பின்னங்கால்களில் எழுப்பி நின்று துள்ளி உறுமிவிட்டுத் தன் பாட்டில் கிளைதாவிச் சென்றது.

செங்காரனின் அழுகையை காட்டெருமை ஒன்றின் மூசல் கலைத்தது. சிற்றாற்றின் நீர் குடிக்க வந்த காட்டெருமை ஒன்று இவனைக்கண்டுவிட்டு மூசியது. பின்னர் தன்பாட்டிற்கு திரும்பிச் சென்றுவிட்டது அவன் விருட்டென எழுந்திருந்தான் 'உன்னை நான் மறந்துவிட்டேன். மறக்கமாட்டேன். வந்தனாவின் நினைவு இருக்குமட்டும் உன்னை எப்படி நான் மறப்பேன்? நீ வெகு தூரம் சென்றிருக்க மாட்டாய். உன் பின்னால் உன் யமன் தொடர்ந்து வருகிறது. நொண்டியா!'

யானைகள் சென்ற தடத்தில் அவன் தொடர்ந்து பிரயாணம் செய்யத் தொடங்கினான். கால்களை முட்கள் குத்தின. உடலில், பாதையில் நீட்டிக்கிடந்த பற்றை முட்கள் கீறின. அவன் எதையும் சட்டை செய்யாமல் ஒரே வேகத்துடன் நடந்து சென்றான்.

''வந்தனா — வந்தனா'' — என்று இதயம் ஓலமிட்டது.

யானைப்பாதையில் தொடர்ந்து சென்றான். யானைகள் ஓரிடத்திலும் சிதறாமல் ஒரே திக்கில்தான் சென்றிருந்தன. தூரத்தில் பஸ் ஒன்று விரைந்தபடி செல்கின்ற இரைச்சல் கேட்டது. பிரதான வீதியை அவன் நெருங்கி விட்டான். ஹொறவுப்பொத்தானை - பன்குளம் வீதியில் அவன் ஏறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஏறிய இடத்திலிருந்து பன்குளத்திற்கு கிழக்காக எட்டு மைல்கள் இருக்கும். வீதியில் சற்று நேரம் தயங்கி நின்றான்.

வீதியில் யானை லத்திக் கும்பங்கள் காணப்பட்டன. அவை நிச்சயம் வீதியைக்கடந்து பதவியாக்காட்டிற்குள் இறங்கிவிட்டன என்பதை அவன் புரிந்து கொண்டான். வீதியில் இருந்து காட்டிற்குள் இறங்கும்போது ஒருயானை சரிவில் சறுக்கி விழுந்திருப்பதும் தெரிந்தது. வீதியில் ஒரு ஈ காக்கையைக் கூடக் காணவில்லை. நிலத்தில் படர்ந்திருந்த பற்றையில் ஏறி அமர்ந்து, ஏதோ காய்களைப்பிடுங்கி வாய்க்குள் அதக்கிக் கொண்டு, ஒரு நரைச்குரங்கு அமர்ந்திருந்தது. அவன் சற்றும் தரியாமல் வீதியைவிட்டுக் காட்டுக்குள் இறங்கினான்,

முற்றிலும் பழக்கமில்லாத புதிய காட்டுக்குள் அவன் புகுந்திருக்கிறான்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரு குடிமனையையும் காணமுடியவில்லை.

❀

''வந்தனா, உண்மையாக நீ என்னை விரும்புகிறாயா?''

''இதென்ன விசர்க்கேள்வி?''

''நானும் நீயும் ஒருபோதும் வாழ்வில் ஒன்றுசேரமுடியாது வந்தனா! நான் ஏழை. வேலையாள். நீ—''

அவள் அவன் வாயைத் தன் கரத்தால் மூடினாள்.

''அன்பிற்கு ஏழை என்று ஒருவரில்லை. உங்களுக்கென்ன குறை? உழைக்கத் தெரியாதவரா?—'' என்று வந்தனா சிரித்தாள்.

❀

'வந்தனா, எல்லாம் போய்விட்டது, என் நிம்மதி சந்தோசம் எல்லாம் உன்னுடன் வந்துவிட்டன. நான் தனி மரம். வந்தனா, என் வந்தனா—'

மாலைவரை அவன் ஓரிடமும் தங்காது நடந்து சென்றான். யானைகள் சென்ற தடம் மேட்டில், பள்ளத்தில் எங்கெல்லாம் சென்றனவோ அங்கெல்லாம் தொடர்ந்து சென்றான், சூரியன் அடிவானத்தில் சரியத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்காகங்களும் வெண் கொக்குகளும் வானத்தில் பறந்து சென்றன. அவன் கால்கள் கெஞ்சத்தொடங்கின. 'உன்னைக் காணும்வரை நான் ஓயமாட்டேன். ஒரு நாள் முழுவதும் நடக்கவா போகிறீர்கள். எங்காவது மேய்ச்சலுக்காகத் தங்கத் தான் போகிறீர்கள். விடமாட்டன் உன்னைக் கொல்லாமல் விடமாட்டன். என் வந்தனாவைத் துடிக்கத் துடிக்கக் கொன்ற உன்னையும் அப்படியே கொல்லாமல் விடமாட்டன்.

மாலைக்கதிர்கள் ஒடுங்கி இருள் மெதுவாக படரத்தொடங்கிய வேளையில் யானையொன்றின் பிளிறல் ஒலி மெதுவாகக் கேட்டது. செங்காரனின் காதுகளில் அவ்வொலி இறங்கியதும் அவன் மனம் தன்னையறியாமலே குளிர்ந்தது: 'வந்தனா உன்னைக் கொன்றவன் எங்கிருக்கிறான் என்பதைக்கண்டு கொண்டேன். பழி வாங்கி உன்னைத் திருப்திப்படுத்துகிறேன், வந்தனா!'

வழியில், யான் ஓயா' நதி குறுக்கிட்டது. மாத்தளை மலைகளில் உற்பத்தியாகி, குறுலுவெவாவைநிரப்பி வழிந்துஏறத் தாழ எழுபது மைல்கள் கிராமங்களுக்கும் காடுகளுக்கும் ஊடாகப்பாய்ந்து, புல்மோட்டைக்குத் தெற்கே கடலில் கலக்கின்ற யான் ஓயாவின் கரையில் அவன் நின்றிருந்தான். யான் ஓயாவின் கரைவரைவந்த யானைகளின் தடப்பாதை ஆற்றுக்குள் இறங்கிச் செல்வதைக் கண்டான். ஆற்றின் படுக்கை இருபத்தைந்து அடிகள் வரை மென்சாய்வாகக் கீழிறங்கியது. யானைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஆற்றின் படுக்கையில் இறங்கியதால் படுக்கையின் சாய்வில் படிகளாகக் கால் பதிந்த இடங்கள் மாறியிருந்தன. யான் ஓயா ஆற்றின் இருமருங்கும் மூங்கில் மரங்களும் பிரம்புக் கொடிகளும் காணப்பட்டன. யானைகள் இவ்வாற்றின் அக்கரையில் தான் நிற்கவேண்டுமென அவன் எண்ணிக்கொண்டான். ஆற்றின் இக்கரையிலும் பார்க்க அடர்த்தியாகவும் தொகையாகவும் எதிர்க்கரையில் மூங்கில் மரங்கள் அடர்த்தியாகப் படர்ந்து வளர்ந்திருந்தன.

அவன் வேகமாக யானைகள் இறங்கிய சாய்வின் வழியாக ஆற்றின் படுக்கையில் குதித்தான். ஆற்றில் வெள்ளம் கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டிப் பாயாவிடினும் அதன் ஆழம் எவ்வளவு என்பதை மாலை மங்கலில் அவனால் கணிக்கமுடியவில்லை. யானைகள் தண்ணீரின் ஆழத்தைப்பற்றிக் கவலைப்படா. அவை நன்கு நீந்தக்கூடியன. தங்கள் கனமான உடம்பை அவை அற்புதமாக நீரில் மிதக்கவைக்கக்கூடியன. அவை ஆற்றை நடந்து கடந்தனவா அல்லது நீந்திக் கடந்தனவா என்பது தெரியவில்லை. ஆனால் அவை ஆற்றைக கடந்திருக்கின்றன என்பதை நீர் விளிம்புவரை காணப்பட்ட பாத அடையாளங்கள் கூறின. ஆற்றின் படுக்கை இருநூறு யார்களுக்கு மேல் விரிந்து கிடந்தது.

காற்றின் போக்கும் சாதகமாகவில்லை. அவன் புறமிருந்து எதிர்கரைக்கு காற்று வீசியது. நிச்சயமாக மனித வாடையை மோப்ப சக்தி நிறையவுள்ள யானைகள் புரிந்து கொள்ளும். ஒன்றில் அவை அவனைத் தாக்க முயலலாம், அல்லது அவ்விடத்தைக் காலிசெய்துவிட்டு விரைவாக ஓடமுயலலாம்.

செங்காரன் இவற்றையெல்லாம் சிந்திக்கும் நிலையில் இல்லை. ஆற்றில் இறங்கிக் கடக்க முடிவுசெய்தான். நீரில் அவன் கால் வைத்து மெதுவாக நடந்தான். பத்து யார் வரை மூழங்கால்வரை நீர் இருந்தது. அடுத்த அடி வைத்தபோது திடீரென நீர் இடுப்புவரை மூடியது நல்ல வேளை; துப்பாக்கியும் காட்ரஜ் பெல்ட்டும் நீரில் நனையாது தப்பின. என்ன செய்வது என யோசித்தபோது எதிர்க்கரையில் மூங்கில் பற்றைகளின் அடியில் ஏதோ ஒன்று அசைவதைக் கண்டான். நிலத்தோடு சரசரவென அசைந்த அந்த உருவம் நீரில் சத்தமின்றி விழுவதையும் கண்டான். மறுகணம் அது நீரைக் கிழித்துக் கொண்டு அவனை நோக்கி வந்தது.

செங்காரனுக்கு அது என்னவென்பதில் சந்தேகமில்லை.
—முதலை!

அலசரப்படாமல் அவன் மெதுவாகப் பின்வாங்கினான். முதலை தன் தலையைமட்டும் சற்று நீருக்குமேல் வைத்துக் கொண்டு மரக்கட்டையாக நீரைக் கிழித்துக்கொண்டு வந்தது. அவன் பின்வாங்கிக் கரையில் ஏறிக்கொண்டான். ஆத்திரத்தால் அவன் உடல் படபடத்தது. முதலையின் குறுக்கீடு அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தை தாமதப்படுத்திவிட்டது. துப்பாக்கியை தோளுடன் அணைத்து அந்த முதலையைக் குறிபார்த்தான். பின்னர் அந்த எண்ணத்தைக் கைவிட்டான். அக்கரையில் நிற்கின்ற யானைகள் துப்பாக்கிச் சத்தத்தால் கலவரமடைந்து விடலாம்.

முதலை ஏமாற்றமடைந்ததுபோல நடு ஆற்றில் தயங்கி நின்றது.

செங்காரன் வேறு வழி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தான். இந்த இடத்தில் ஆற்றை அவன் கடக்காவிடில் எவ்வளவு தான் முயன்றாலும் இக்காட்டில் யானைகளின் அடித் தடத்தைப் பின்னர் அவனால் கண்டுபிடிக்க முடியாது.

அவன் நின்ற இடத்திலிருந்து இடதுபக்கமாக நூறுயார் தூரத்தில் பெரிய மருதமரம் ஒன்று ஆற்றிற்குக் குறுக்கே விழுந்து கிடந்தது. அதன் கிளையொன்று எதிர்க்கரைவரை முட்டியபடி நீரில் அசைந்தது. அதிர்ஷ்டம் அவன் பக்கந்தான்!

'இது அதிர்ஷ்டமா? வந்தனா? உன்னை அநியாயமாகப் பறிகொடுத்த நான் அதிர்ஷ்டம் பார்த்திருக்கிறேன். வந்தனா— என் வந்தனா — எவ்வளவு வேதனையுடன் நீ செத்திருப்பாய்? எப்படியெப்படியெல்லாம் வாழலாம் என்று கற்பனை செய்திருப்பாய்?'

❁

''நான் சமைத்து வைப்பேணாம். நீங்கள் வேலைக்குப் போயிட்டு வருவியளாம். சாப்பிட பசியோடு வர, உங்க மகன் கத்துவானாம். நீங்கள் கோபத்தில் கத்துவியளாம்.''

''கடுமையாக் கற்பனை பண்ணாதை வந்தனா, ஒருமகன் மட்டும் தானா? வரியத்துக்கு ஒன்றாக—''

அவள் வெட்கத்துடன் தலைகுனிந்து சிரிப்பாள்.

அவன் அவள் வெட்கத்தில் சிரிப்பதைப்பார்த்து ரசித்திருப்பான்.

❁

''வந்தனா — எல்லாமே போய்விட்டன!''

அவன் ஆற்றில் விழுந்திருந்த மருதமரத்தின்மூலம் அக் கரையை அடைந்தான். ஆற்றின் படுக்கையில் இருந்து சாய்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறி கரையில் இறங்கியவன் கண்களின்முன் வெட்டைவெளி யொன்று விரிந்துகிடந்தது. அவ்வெட்டையில் கரிய குன்று களாக யானைகள் சிதறி நின்றிருந்தன. பெரிதும் சிறிதுமாக— அவையெல்லாம் அசையாமல் நின்றிருந்தன. ஒப்பெடுக்கின்ற போலும்.

அவன் அவற்றை மிகுந்த சினத்துடன் பார்த்தான், எங்கே அந்த நொண்டியன்?

அவன் கரம் வெறியுடன் துப்பாக்கியைப் பற்றியது.

## ஆறு

அந்த வெட்டையில் நாற்பது யானைகள் வரையில் நின் றிருந்தன. எல்லா வயது யானைகளும் காணப்பட்டன. காது களை அசைக்காது, வால்களை ஆட்டாது அவை நின்றிருப்பது பயம் கலந்த அழகாக காணப்பட்டது. குட்டி யானைகள் மூன்று நான்கு, தாய் யானைகளுக்கு அருகில் நின்றிருந்தன. நிலவு இன்னமும் வானில் வரவில்லை. மேலைவானில் சரிந்துகொண் டிருந்த கதிரவன் தன் கதிர்களைப் பூரணமாக ஒடுக்கிக்கொண் டான்.

வெட்டையில் மங்கிய இருட் போர்வை படர்ந்தது. திட்டுத் திட்டான கரிய குன்றுகளாக யானைகள் நின்றிருந்தன. செங் காரன் அளவிலாக் கோபத்துடன் நொண்டியனை அடையாளங் காண முயன்றான். இருள்படரத் தொடங்கியதால் அடையாளம் தெரியவில்லை. யானைகள் அசையாமல் நின்றிருந்ததனாலும் அடையாளம் காணமுடியவில்லை.

இப்போதுதான் அவனுக்கு ஒன்று மனதில் உறைத்தது. தான் காற்றுவளத்தில் நிற்பதைக் கண்டான். நிலவுவந்த பின்புதான் நொண்டியனை அடையாளம் காணமுடியும் அதன் பின்னர் தான் வெடிவைக்கவும் முடியும். அவன் அதற்காக அழிந்துபோக வும் தயாராக இருக்கிறான்; நொண்டியனைப் பழிவாங்குவதற்கு முன்னர் அழியத் தயாராகவில்லை!

வெட்டை அவ்வளவு பெரியதுதான். ஆனால் அவன் நின் றிருந்த இடம் வெட்டையின் ஒரு பக்க ஓரமாக இருந்தது. அதனால் அவன் வெட்டையின் எதிர் வளத்திற்குச் செல்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு செய்தான். மனிதவாடையை மோப்பம் பிடிக்காத பக்கம் அது. காற்றின் எதிர்ப்பக்கம். மரங்களின் பின் மறைந்து மறைந்து அவன் எதிர்ப்பக்கத்திற்கு முன்னேறினான். சருகுகளில் கால்களைப் பதிக்கும் போது வேட்டைக்காரனுக்குரிய அவதானத்துடன் பதித்தான்.

அப்படியும் அக்கூட்டத்தில் நின்றிருந்த பெரிய யானை மோப்பம் பிடித்துவிட்டதுபோல ஒரு தடவை அசைந்தது. பின்னர் உடல் முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றி வெட்டையை அவதானித்தது. காதுகளை வேசமாக விசிறி துதிக்கையைச் சற்று உயர்த்தி மெதுவாக ஒரு மூசல் ஒலிவிட்டது. அதற்குள் செங்காரன் வேகமாக எதிர்ப்பக்கத்தை அடைந்துவிட்டான்.

யானைகள் சற்று கலவரம் அடைந்தன போலக் காணப்பட்டன. பின்னர் அமைதியடைந்தன.

வானத்தில் நிலவு தலைகாட்டியது. மெல்லிய நிலவொளியில் யானைகள் ஆற்றங்கரை மூங்கில் காடுகளை நாடிச் செல்லவும் தலைப்பட்டன. தரையில் இருந்து அவற்றை அவதானித்து நொண்டியனைக் கண்டுபிடிப்பது செங்காரனுக்கு இலேசான காரியமாக இப்போது தெரியவில்லை. வசதியான மரமொன்றில் ஏறிக்கொள்ள வேண்டும். அங்கிருந்து கொண்டு நொண்டியனை அடையாளம் காணவேண்டும். பின்னர் அதனை வெடி வைக்கக் கூடிய அளவிற்கு நெருங்கி வெடி வைக்கவேண்டும். எதற்கும் நொண்டியனை அடையாளம் காண்பது அவசியம்.

துப்பாக்கியைத் தோளில் மாட்டிக் கொண்டு அருகில் வெட்டையை அடுத்து ஓங்கி வளர்ந்திருந்த முதிரை மரம் ஒன்றில் அவன் தாவி ஏறினான். ஏறத்தக்க விதமாக கீழ்க் கிளைகள் அமைந்திருந்தன. வெட்டையை நோக்கித் தாழ்ந்த கிளையொன்றில் வசதியாக அமர்ந்து கொண்டான். அகன்ற அக்கிளை அவன் இருப்பதற்கு வசதியாக அமைந்திருந்தது.

அவன் கண்கள் வெட்டையில் நின்றிருந்த யானைகளில் நிலைத்தன. ஒவ்வொன்றாகப் பார்த்தான். பின்னங்கால்களை அவதானித்தான். கண்கள் அவதானித்தன. இதயம் அழுதது.

'வந்தனா, என் உயிரே.'

'நீ இப்போது சாம்பலாகப் போயிருப்பாய், உன் எழில் உடலை தீயிட்டு மண்ணோடு மண்ணாக்கியிருப்பார்கள். உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கனவுகள் எல்லாம் காற்றில் சாம்பலாகப் பறந்து விட்டன, வந்தனா!'

''என்னில் கோபமா''

''இல்லை''

''பொய் சொல்லிறியள் உங்கட மூஞ்சியைப்பார்க்கத் தெரியுது, கோபம் என்று''

''ஏன் நான் கோபிக்கிறன்?''

''நேற்றைக்கு உங்களுக்குச் சொல்லாமல் நான் கன்னியாவுக்கு மாலாவுடன் போனதுக்கு''

''எனக்கு நீ ஏன் சொல்லவேணும் வந்தனா. அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தானே போனனி. எனக்குச் சொல்லத் தேவையில்லை.''

''நான் இனி இப்படிச் செய்யமாட்டன். சொல்லாமல் போகமாட்டன்'' அவள் கண்கள் பொலபொலவென நீரைச்சொரிந்தன. அவன் உள்ளம் இரங்கிவிட்டது.

''அழாதை வந்தனா.'' உண்மையாக் கோபமில்லை. அழாதை என்றபடி அவள் கண்ணீரைத்துடைத்துத் தன்னுடன் இழுத்து அணைத்துக்கொண்டான். அவள் முகம் மலர்ந்து சிரித்தாள்.

'வந்தனா நீ எங்கே? என்னுயிரே நீ எங்கே?'

நொண்டியனை அந்த யானைக் கூட்டத்தில் அவனால் இலகுவில் அடையாளம் காணமுடியவில்லை. அவை தூரத் தூர நின்று மேய்ந்து கொண்டிருந்தன. நொண்டியன் எங்காவது மறைந்து நிற்கிறதோ? மனிதவாடை பிடிக்காத அந்த மூதேசி எங்காவது காத்து நிற்கிறதோ?

வெட்டையில் நின்றிருந்த யானைகள் யாவும் புற்களையும் மூங்கில்களையும் வேகமாக மேய்ந்தன. வெட்டையின் மத்தியிலும் ஆற்றங்கரைப் பக்கமாகவும் வளர்ந்து செழித்திருந்த புற்கள் இருந்தவிடம் தெரியாமல் மறைகின்ற வேகம் அவனுக்கு வியப்பைத் தந்தது. நன்கு வளர்ந்த ஒவ்வொரு யானைக்கும் அன்றாடம் அறுநூறு றாத்தல் உணவு தேவையாம். சென்ற இரவிலிருந்து ஓரிடமும் தரிக்காமல் ஒரே வீச்சாக நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த அவை யான் ஆற்றின் வெட்டையில்தான் அன்றைய உணவை உட்கொள்கின்றன.

அக்கூட்டத்தின் தலைவன் மற்றைய யானைகளை மேய விட்டு விட்டு, ஒரு வில் வளைவில் சுழன்று திரிந்து சுற்றாடலை அவதானித்தது. இடையிடையே மேய்வதும், பின்னர் வெட்டையின் நாலாபக்கங்களிலும் துதிக்கையை உயர்த்திய படி காதுகளைக் காற்றிலே வீசிப் பார்ப்பதுமாக நின்றது.

அது எதனாலோ கலவரமடைந்திருக்கிறது. செங்காரனின் வரவை அது உணர்ந்திருப்பது போலப் பட்டது.

நிலவு உச்சிக்கு வந்துவிட்டது. யானைகள் இன்னமும் மேய்ந்து கொண்டுதான் இருந்தன. செங்காரன் யானைகளின் ஒவ்வொரு அசைவிலும் நொண்டியனைத் தேடிக் கொண்டிருந்தான். பசியில்லை; கண்களை உறக்கமும் தழுவவில்லை. பழிவாங்கும்வரை அவன் ஓயப்போவதுமில்லை.

குட்டி யானை ஒன்று மேய்ந்துகொண்டிருந்த தாயிடம் ஓடியது. தாய் யானையின் கால்களின் கீழ் அது புகுந்தது. தாயின் முன்னங்கால்களுக்கு இடையில் இருந்த மார்பில் அது பால் குடித்தது. தாய் யானை குட்டியைத் துதிக்கையால் தடவிக் கொடுத்தது.

'வந்தனா — என் மகன் உன் மடியில் கிடந்தது — ஐயோ எல்லாம் போய்விட்டதே, உன்னோடு வந்தனா — வந்தனா!''

அவன் கண்கள் வியப்பால் விரிந்தன. நொண்டியனைக் கண்டுகொண்டான். ஆற்றின் மூங்கில் புதர்களுக்கிடையே இருந்து பின்னங்காலொன்றை மெதுவாக இழுத்து வைத்தபடி அந்த நொண்டியன் வெட்டையில் ஏறினான். வெட்டையில், நொண்டியன் ஆற்றைக் கடந்து ஏறியதும் ஓய்வெடுக்காமல் மூங்கில் காட்டிற்குள் மேயப்போயிருக்க வேண்டும். பின் தங்கி வந்ததால் முன்னரே மேயப்போயிருக்க வேண்டும்.

''வருகிறாயா? வாடா — வா — உனக்காகத்தான் நான் இங்கே காத்திருக்கிறன் — உன்னை கொல்லாமல் விடமாட்டன். உன் உடலை சன்னங்கள் சல்லடைக் கண்களாகத் துளைக்காமல் விடமாட்டன்! வா — என் பக்கம் நெருங்கி வா —'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொண்டியன் இழுத்திழுத்து வெட்டையின் மத்திய பகுதிக்குச் சென்றது. செங்காரன் டபிள் பரலில், பெல்டிலிருந்து எடுத்து இரண்டு காட்ரஜ்களை இட்டு, துப்பாக்கியை மூடினான் 'கிளிக்' என்ற சத்தம் மெதுவாக எழுந்தது. அதே வேளை, பெரிய யானை ஒன்று அவன் இருந்த பக்கமாகப் பார்த்து காதுகளை விசியடித்து மூசியது. மேய்ந்துகொண்டிருந்த யானைகள் கலவரத்துடன் ஒரு கணம் தலையை உயர்த்திப் பார்த்தன. காட்டு யானைகள் தாம் உணவைப் பெறும் இடங்களில் தொந்தரவுகள் ஏற்படுவதை விரும்புவனவல்ல. அவன் அமர்ந்திருந்த மரத்தில் வந்து அமருவதற்கு பறந்துவந்த ஆட்காட்டிக் குருவியொன்று மரக்கிளையில் அவன் அமர்ந்திருப்பதைக் கண்டு, விரிட்டுச் சத்தம் எழுப்பியபடி திரும்பிப்பறந்தது. பின்னர், மரத்தைச் சுற்றிச் சுற்றி அவலமாகக் கத்தியபடி பறந்தது.

காட்டின் செய்திகள் அவனுக்கு மட்டுந்தான் புரியும் என்பதில்லை. யானைகளும் புரிந்துகொண்டன. பெரியதொரு ஆண் யானை மூசியபடி அவன் இருந்தமரப்பக்கமாக ஓடி வந்தது. நூறு யார்களுக்கு அப்பாலேலே நின்றுவிட்டது. மரத்தை நெருங்கினால் அதன் தலை உச்சியைத் தாக்கித் துளைக்க அவன் துப்பாக்கியில் 'எஸ். ஜீ.' சன்னங்கள் இடப்பட்டிருக்கின்றன.

'போடா — போய் அந்த நொண்டியனை அனுப்பு, அவனுக்கும் எனக்கும்தான் பிணக்கு. பிணக்கை நான் தீர்த்துக்கொள்கிறேன். அவனை அனுப்பாவிடில் உங்கள் எல்லோரையும் பழி வாங்குவேன்.'

நொண்டியனுக்கு மனித மோப்பம் அற்புதமாகத் தெரிந்திருக்கும் போலும். அதனால் நொண்டியன் வேகமாக மரத்தடியை நாடி வந்ததும் செங்காரனின் கை பரபரத்தது. வெறி ஆட்கொண்டது. தோளில் இருந்தபடி துப்பாக்கியை அணைத்து—

நூறு யார் அளவில் நொண்டியன் வந்துவிட்டது. துப்பாக்கிவிசையில் படிந்த சுட்டுவிரல் அவனையறியாமல் தட்டிவிட்டது வெடி நொண்டியனை நோக்கிப் பாய்ந்தது! சன்னங்கள் சிதறின. தீர்ந்த சத்தத்திலிருந்து சன்னங்கள் உடலில் தைக்கவில்லை என்பதை செங்காரன் தெரிந்துகொண்டான். அவன் அவசரப்பட்டுவிட்டான்; நொண்டியன் அருகில் வரவிடாமல் வெடியைத் தீர்த்துவிட்டான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டை வெளியில் தீர்ந்த வெடிச்சத்தம் யானைகளை ஒரு கணம் கலக்கிவிட்டது. மற்ற வெடி தீர்ப்பதற்கு முன்னரே நொண்டியன் வேகமாகப் பின்வாங்கிவிட்டது. தூரம் அதிகம். செங்காரன் தன்னை நொந்துகொண்டான். 'தப்பிவிட்டாய், தப்பிவிட்டாய், ஒருக்காலும் நீ தப்பமாட்டாய், நீ எங்கு போனாலும் நான் தொடர்ந்து வருவேன். நொண்டியா!'

வெட்டையில் நின்றிருந்த யானைகள் எல்லாம் பெரிய யானையைச் சுற்றி நின்றன. அவை திடீரென ஓட முயலவில்லை. பின்னர் தலைவனை முன்விட்டு அவை பின்னால் சென்றன. இராணுவ அணிவகுப்புப்போல பட்டது செங்காரனுக்கு. அக் கூட்டத்துள் நொண்டியன் எங்கு புகுந்தது என்பது தெரியவில்லை. முன்னால் நின்றிருந்த பெரிய யானை சற்றுத் தலையசைத்துப் பார்த்தது. பின்னர் வடமேற்குப் பக்கமாக விரைந்தது. அவ்வளவு வேகத்தில் யானைகள் ஓடியதை செங்காரன் ஒருபோதும் கண்டவனல்லன். என்ன வேகம்! எதிர்ப்பட்ட பற்றைகளை எல்லாம் தவிடுபொடியாக்கிக் கொண்டு அந்த யானைக் கூட்டம் விரைந்தது. 'நொண்டியா, நீ கூடவா இவ்வளவு வேகமாக ஓடுகிறாய்? ஓடுங்கள் ஓடுங்கள், நானும் தொடர்ந்து வருகிறேன்.'

ஐந்து நிமிடத்தில் யானைகள் வெட்டையைவிட்டு காட்டுக்குள் புகுந்து மறைந்தன. காட்டைத் துவம்சம் செய்தபடி யானைகள் விரைகின்ற ஒலி வெகுநேரம் கேட்டபடி இருந்தது.

செங்காரன் மரத்திலிருந்து கீழே இறங்கினான்.

துப்பாக்கியை முறித்து தீர்ந்ததோட்டாவை எடுத்து எறிந்துவிட்டு புதிய தோட்டாவை இட எண்ணினான். தீர்ந்த தோட்டாவை கையில் எடுத்த செங்காரன் உண்மையில் திகைத்து விட்டான். அவசரத்தில் எஸ். ஜீ. காட்ரஜ்ஜிற்குப் பதிலாக நம்பர் 4 சிதறு சன்ன காட்ரஜ்ஜை இட்டுவிட்டான். நொண்டியன் பக்கம் அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. வேட்டைக்காரனுக்கு அவசரமும் பதட்டமுமிருக்கக் கூடாது.

அவன் வேட்டைக்காரனா? 'வந்தனா, நான் பழி வாங்கப் புறப்பட்டிருக்கும் உன் காதலன்; கணவன்.'

யானைக்கூட்டம் விரைந்த பக்கமாக அவன் நடந்தான். அவை எவ்வளவு கிலியுடன் சென்றிருக்கின்றன என்பது அவை சென்ற பாதையின் அலங்கோலத்திலிருந்து தெரிந்தது.

## ஏழு

யானைக்கூட்டம் காட்டின் பாதையைக் கலக்கியடித்த படி விரைந்து சென்றிருந்ததால் மரங்களில் உறங்கிக் கொண்டிருந்த பறவைகளும் குரங்குகளும் பயத்தால் பரபரப்படைந்திருந்தன. பறவைகளின் பல்வேறு ஒலிகள், அப்பாதையில், ஒரே வேகத்துடன் விரைந்து கொண்டிருந்த அவன் காதுகளில் விழத்தவற வில்லை. சிறு ஓணான் ஒன்றினைப் பதம் பார்த்துக் கொண்டிருந்த சிறு ஆந்தையொன்று யானைகள் விரைந்த பாதையில் பின் தொடர்ந்து செல்கின்ற மனிதனைக் கண்களைச் சுழற்றிப் பார்த்தது. பின்னர் அருவருப்பான தொனியில் இரைச்சலிட்டது. இரைச்சலிட்டபடி சிறகடியோசை எழுப்பாமல் வேறொரு மரத்துக்குப் பறந்து சென்றது.

செங்காரன் காலில் இடறிய களைகளை விலக்கித்தள்ளியபடி, விரைந்து நடந்து கொண்டிருந்தான். ஓரிடத்தில் பத்தடி நீளமான பாம்பொன்றை மிதித்தபடி கடந்து சென்றான். மிதிப்பினால் பாதிப்புற்ற பாம்பு சீறிக் கொண்டு தலையைத் தூக்கியபோது அவன் ஐந்தடி முன்னால் நடந்திருந்தான் அது ஏமாற்றத்துடன் பற்றைக்குள் சரசரத்தபடி புகுந்து கொண்டது. பாம்புப் புற்றொன்றை யானைகள் சிதைத்துவிட்டதனால் நூற்றுக் கணக்கான பாம்புக்குட்டிகள் குறுக்கும் நெடுக்குமாக நெளிந்ததைக்கூட அவன் அவதானிக்கும் நிலையில் இல்லை.

அதிகாலையில் யான் ஓயாவின் இன்னொரு கிளையாற்றை அவன் அடைந்தான். யானைகள் அந்த ஆற்றையே கடந்து வடபுறமாகச் சென்றிருப்பது தெரிந்தது. அவன் கால்கள் சோர்ந்தன, கண்கள் நித்திரையின்றி தவித்தன. ஆற்றில் தெள்ளிய நீர் ஓடிக் கொண்டிருந்தது. பசி மயக்கம் ஒருபுறம். தலையைச் சுற்றுவது போன்றதொரு உணர்வு. அப்படியே அவ்வாற்றின் கரையில் அமர்ந்துகொண்டான். அவன் கண்கள் இருளத் தொடங்கின. கண்களைக் கசக்கிக் கொண்டான்.

இருளத் தொடங்கின. கண்களைக் கசக்கிக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வந்தனா, என் வந்தனா, நீ எங்கே? இந்த உலகத்தில் உன்னை இழந்து நான் தவிக்கின்றேன்.

❁

"என்ன — ?"

"யானையள் பயப்படாதே. நானிருக்கிறன். துவக்கிருக்குது."

❁

'நீ எவ்வளவு பயந்தாய், நானிருந்தேன். துவக்கிருந்தது. உன்னை என்னால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே!'

❁

"என்ன முகத்தை உம்மென்று வைச்சிருக்கிறியள்?"

"உன்னோடு இனி கதைக்கமாட்டன், வந்தனா."

"ஏனாம்?" என்றபடி வந்தனா சிணுங்கினாள்.

"அப்படித்தான்"

"எப்படியாம். அப்ப நான் போறன். நீங்க உம்மென்று முகத்தை நீட்டிக்கொண்டிருங்க."

அவள் நடக்க, அவன் அவள் கரத்தைப் பற்றி இழுக்கிறான். அவள் இழுபட்டு பொத்தென அவன் மடியில் சாய்கிறாள். அவன் அவளைக் கட்டி அணைக்கும்போது அந்த மென்மையான மார்புகள் அவன் நெஞ்சில் பதிக்கின்றன.

"வந்தனா!"

"இப்படியே என்றுமிருக்கக்கூடாதா?"

"இருப்பம்" என்றபடி அவன் குனிந்து அவள் உதடுகளில் —

'வந்தனா, வந்தனா, நீ எங்கே?'

அவன் சோர்ந்து அப்படியே அந்த மணற்கரையில் சரிந்தான். பசிகளைப்பும் நீண்ட தூரம் நடந்த களைப்பும் கவலைகளின் சுமையும் சேர்ந்து அவனை விரைவில் தூங்க வைத்தன. சிற்றாற்றின் தண்காற்றின் தழுவலில் அவன் தன்னை மறந்து உறங்கிப்போனான். கலக்கமான கனவுகள் இடையிடையே அவனை திடுகாட்டத்திற்குள்ளாக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கண்களை விழித்தபோது சூரியனின் கதிர்கள் அவனில் பூரணமாகப்பட்டுக் கொண்டிருந்தன. அதன் வெம்மைதான் அவனை விழிக்க வைத்தது. துடித்துப் பதைத்து எழுந்திருந் தான். சிலகணங்கள் எங்கிருக்கிறான் என்பது அவனுக்குப் புரியவில்லை. திடீரென வந்தனா கொலையுண்ட காட்சி நினைவில் வர, சோகம் இருளாக அவனைக் கவர்ந்து கொண் டது; 'வந்தனா இரண்டு இரவுகள் முடிந்துவிட்டன. இன்னமும் உன்னைக் கொன்ற நொண்டியன் சாகவில்லையே!"'

மெதுவாக எழுந்து ஆற்று நீரில் முகத்தைக் கழுவிக் கொண்டான். இரண்டு மூன்று வாய் அள்ளிப்பருகிக் கொண் டான். அவன் தலைமயிர் காய்ந்து பறந்தது. கண்கள் சிவந்து வீங்கியிருந்தன.

நிமிர்ந்து வானத்தைப்பார்த்தான். பதினொரு மணிக்கு மேல் இருக்கும். அவன் கண்கள் ஆற்றின் மறுகரையில் நிலைத்தன. 'நீங்கள் வெகுதூரம் சென்றிருக்கலாம். ஆனால் நீங்கள் செல்கின்ற பாதையை உங்களால் அழித்து விடமுடி யாது. ஓடுங்கள் ஓடுங்கள். நொண்டியா! யமனுக்குப் பயந்து ஓடு. நான் பின்னால் வரத்தான் போகிறேன். வெல்வது நீயா. நானா?.

பசி வயிற்றைக் கிள்ளியது. 'வந்தனா, உன்னை இழந்த நான் சாப்பிடுவதா?'

❋

''வடிவாச்சாப்பிடுங்களேன். இப்படிக்கொறித்தால் என்ன ஆகும்? பகலெல்லாம் வெயிலில் வேலைசெய்யிறவை நல்லாச் சாப்பிட வேணும்.'' என்றபடி அகப்பையில் சோற்றையள்ளி அவன் கலத்தில் வந்தனா இடுகிறாள்.

''என்ன வந்தனா, இது எப்படிச் சாப்பிடுகிறது? அம்மா இல்லாட்டில் உன்பாடு கொண்டாட்டம்தான்.''

''அம்மா இல்லாவிடில்தானே நான் சாப்பாடு தர முடியும்'' என்றபடி கறியை அள்ளி கலத்தில் இடுகிறாள்.

''ஐயோ வேண்டாம், வந்தனா, அநியாயமாக கொட்டத் தான் வேணும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மிஞ்சினால் கொட்டத் தேவையில்லை நான் சாப்பிடுவன்'' என்றபடி அவள் தலைகுனிந்தாள்.

அப்போது அவள் முகத்தில் பரவிய நாணம்

✽

'வந்தனா, வந்தனா என் உயிரே, இனி உன்னைக் காண்பேனா? அடே நொண்டியா? நீ எங்கே ஓடப்போகிறாய். உன்னை முடிக்குமட்டும் நான் திடமாக இருக்கத்தான் வேண்டும். நான் சோரக்கூடாது என் உடல் இளைக்கக் கூடாது. உன்னைத் துரத்தி அழிக்குமட்டும் நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தான் வேண்டும்.'

எதைச்சாப்பிடுவது? மனிதரின் காலடி அதிகம் படாத இக்காட்டில் பறவைகளுக்கும் சிறு மிருகங்களுக்கும் குறைவில்லை என்பதை அவன் அறிவான். அவற்றைச் சுட்டு பச்சையாகவா உண்பது? நெருப்பு இருந்தால் போதும். வாட்டி விடலாம்.

யான் ஓயாவின் கிளையாறு எங்கோ கிராமப்புறத்தில் வெள்ளத்தோடு அள்ளிக் கொண்டு வந்த தேங்காய் இரண்டு ஆற்றின் கரையில் ஒரு பாறையுடன் தடைப்பட்டு ஒதுங்கியிருப்பது அவன் கண்களுக்குப் பட்டது. கடவுள் அவன் பக்கம் இருக்கிறார். அவன் தேங்காய்களை ஆவலுடன் எடுத்துக் கொண்டான். ஒன்றில் முளை வந்திருந்தது. நீரில் ஊறிக்கிடந்த அவற்றை பாறையில் மோதிச் சிதறடிப்பதற்கு அதிகநேரம் தேவைப்படவில்லை. ஒரு தேங்காயில் பூரான் விளைந்திருந்தது. மற்றையதேங்காய் அழுகாமல் நல்லநிலையில் இருந்தது. நன்கு முற்றி விளைந்த தேங்காய். அதனால் சிரட்டையை விட்டு தேங்காய் இலகுவில் கழன்று விட்டது. பூரானையும், ஒருதுண்டு தேங்காயையும் ஆவலுடன் சாப்பிட்டான். அதிகம் சாப்பிட முடியவில்லை, நெஞ்சை அடைத்தது. மிகுதித் தேங்காய்ச் சொட்டுக்களை இடுப்பில் செருகிக் கொண்டான். நீரை அள்ளி வயிறு நிரம்பக் குடித்தான். துப்பாக்கியையும் ரோச் லைற்றையும் எடுத்துக் கொண்டான். ஆற்றில் அவ்வளவு தண்ணீர் இருக்கவில்லை.

நீரில் கால்களை வைத்ததும் முதலையின் நினைவு வந்தது. அப்படியே நின்றபடி சுற்றாடலை அவதானித்தான். பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில் இறங்கி ஆற்றைக் கடந்து மறுகரையில் ஏறினான். அங்கும் வெட்டைவெளியொன்று காணப்பட்டது. அவ்வெட்டையில் நீர் நிரம்பி ஈரம் இருந்ததால் யானைகள் சென்ற பாத அடிகள் தெளிவாகத் தெரிந்தன. தொண்டியனும் சென்றிருக்கிறான்.

அவன் தொடர்ந்து சென்றான்.

## எட்டு

யான் ஓயாவின் இன்னொரு கிளையாற்றையும், கெப்பிற்றிகொலாவ-பதவியா பிரதான வீதியையும் கடந்து யானைக்கூட்டம், பதவியாக்குளத்தின் அலைகரை வழியாக வடக்கு நோக்கிச் சென்றிருந்தது. பதவியாக்குளத்தின் அலைகரையில் செங்காரன் வந்தடைந்தபோது அடிவானில் சூரியன் சரியத் தொடங்கியிருந்தான் அலைகரையில் அவை தங்கி நின்று நீர் குடித்திருக்கின்றன. பின்னர் தான் வட்புறமாகச் சென்றிருக்கின்றன. அவை இன்றிரவு மேய்ச்சலிற்காகத் தங்குகின்ற இடத்தை அவன் எப்படியாவது இருள்வதற்குள் அடைந்து விட வேண்டும். நேற்றிரவு போல இன்றும் குறி தப்பக்கூடாது.

பதவியாக்குளத்தை மா ஓயாவின் இரு தொடக் கிளையாறுகள் நீர்வழங்கி நிரப்புகின்றன. இருகிளையாறுகளை மறித்துத் தான் பதவியாக்குளம் கட்டப்பட்டிருக்கின்றது. குளத்தை நிரப்பிய மாஓயா சற்று வடதிசையாக பத்துமைல்கள் தூரம்வரை சென்று, பின்னர் கிழக்காகத் திரும்பி கொக்கிளாய் கடலேரியை அடைந்து கடலுடன் சங்கமமாகின்றது.

செங்காரன் பதவியாக்குளத்தின் அலைகரையில் கிடந்த கருங்கற் குன்று ஒன்றில் காலாற அமர்ந்து கொண்டான். தேங்காய்த் துண்டுகள் அவன் பசியைக் கிளப்பாது தடுத்தன. அவன் அமர்ந்திருந்த பாறைக்கு அருகில் சிற்றாற்றின் வாய்க்கால் குளத்தினுள் சென்றது.

'வந்தனா, இதைத்தான் விதி என்பதா? உன்னுடன் இன்று மகிழ்ந்திருக்க வேண்டிய நான், இப்படி ஒரு கெட்ட யானையைப் பழிவாங்க, வந்தனா, நீ செத்து விட்டாயா? உன்னை இனி இப் பிறவியில் ஒரு போதும் நான் காணவே முடியாதா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயத்தில் வெகு உயரத்தில் வெகு நிதானமாகப் பறந்து வந்த நீர்க்காகங்கள் ஐந்தாறு குளத்தினுள் பட்டுக்கிடந்த மரமொன்றில் இறங்கி அமர்ந்தன. அவை நீர்க்காகங்கள் போன்றிருந்தாலும் அவற்றின் கழுத்து பாம்பு போல நீண்டமைந்திருந்தது. அவை வழுவாங்கிகள் என்பதை அவன் கண்டு கொண்டான். 'வெடிவைப்பமா?'

வழுவாங்கிகளின் கரிய நிறம் சாய்கதிரின் ஒளியில் பளபளத்தது. சிறிய தலையுடன் பாம்புபோல நீண்டகழுத்து. பளபளப்பான சாம்பல் நிறத்தில் அவை ஒளிர்ந்தன. கரிய உடலில் முதுகில் பளபளப்பான சாம்பல் நிறக்கோடுகள் இருந்தன. மரக்கிளையில் அமர்ந்திருந்த வழுவாங்கி ஒன்று அம்புபோலக் கழுத்தை முன் நீட்டியபடி நீரினுள் பாய்ந்தது. சற்று நேரம் செல்ல அதன் கழுத்து சற்றுத் தூரத்தில் பாம்பு போல உயர்ந்தது; அதன் அலகில் விறால் மீன் ஒன்று துடித்தது; அதனை தாடையை உதறி ஆகாயத்தில் வீசியது; மீன் திரும்பி வர வாயைப் பிழந்தது; அப்படியே விழுங்கியது.

செங்காரன் அதனைப் பார்த்துக் கொண்டிருந்தான். அழுவதற்குக்கூட கண்களில் ஈரமில்லை. மீனை விழுங்கிய வழுவாங்கியின் மீது அவனுக்கு அளவிலா ஆத்திரம் வந்தது. துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்துத் தோளில் அணைத்தான். குறி சரியாக இருந்தபடி கிட்டவில்லை. அதனால் குன்றில் எழுந்து நின்று குறி வைத்தான். அவன் குறிபார்த்த திக்கில் அலைகரைவிளிம்பில் ஒருவன் நின்றிருந்தான். செங்காரன் துவக்கு நீட்டியதை முதலில் கண்ட அவன் பெருங்குரலில் அலறினான்:

''எப்பா மாத்தையா. நான் பிள்ளை குட்டிக்காரன். சுட்டிடாதையுங்க'' என்று சிங்களத்தில் அலறியபடி கைகளைக் கூப்பிக் கும்பிட்டான். செங்காரன் தன்னைச் சிலிர்த்துக் கொண்டான். துவக்கைப் பிரமிப்புடன் தாழ்த்திக் கொண்டான். நல்ல வேளை. குறி வைத்த அவனுக்கு வழுவாங்கிதான் தெரிந்தது. மனிதனல்லன். ''எண்டக்கோ'' என்று அவனை செங்காரன் அன்பாக அழைத்தான். அவன் பயந்தபடி அவனை நெருங்கி வந்தான். அவன் வயதானவன். கரத்தில் கோடரி இருந்தது. விறகு வெட்ட அல்லது தேனெடுக்க வந்திருக்க வேண்டும். கரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் டபிள்பரல் துவக்குடன் அலைகரைக் குன்றில் விசரன் போல ஒரு மனிதன் இருப்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. முன்பின் அவன் கிராமத்தில் காணாத புதிய மனிதன்.

"கினி பெட்டி தியனவாத?" என்று செங்காரன் கேட்டான். அந்த மனிதன் பயபக்தியுடன் நெருப்புப்பெட்டியொன்றை எடுத்து அவனிடம் தந்தான்.

"உம்ப செருவராத?" என்று பயத்துடன் கிழவன் கேட்டான்.

"ந நா..."

"பொறுக்கியண்ட எப்பா மாத்தயா."

பொய் சொல்ல வேண்டாம் என்றான் அந்த மனிதன். இப் பகுதில் இப்படிப்பட்ட பலரை அவன் கடந்த காலத்தில் கண் டிருக்கக் கூடும்.

"மொனவத ஓன மாத்தயா?" உங்களுக்கு என்ன வேண்டும் என்று அவன் கேட்டான். அப்போது அவனுக்கு என்ன வேண் டும்? இவனுக்கு தன் கதையை விளங்கப் படுத்துவதில் புண்ணி யமில்லை. மிருகத்தோடு பழி தீர்க்கப் புறப்பட்டிருக்கும் அவனைப் பைத்தியக்காரன் என எண்ணிவிடுவான். தன்சேட்டின் கைமடிப் பில் ஐந்து ரூபாய் தாள் ஒன்றிருப்பது அவனுக்கு நினைவு வந் தது. அதை எடுத்து அவனிடம் நீட்டினான். அவன் பயபக்தியு டன் அதை வாங்கிக் கொண்டான்.

"பொட்டகின்ட மாத்தயா" என்றபடி அவன் சற்றுத்தூரம் ஓடினான். பின்னர் அவன் திரும்பி வந்தபோது அவன் கையில் ஒரு சாக்குப்பை இருந்தது. அச்சாக்குப் பையினுள் கையைவிட்டு வெளியில் எடுத்தான். காய்ந்த பாண் ஒரு றாத்தல் கரத்தில் இருந்தது. அதை செங்காரனிடம் நீட்டினான். செங்காரனின் கண்கள் கலங்கின; 'வந்தனா'

"வீரர்கள் அழக்கூடாது." என்றான் கிழவன். செங்காரன் எதுவும் கூறாமல் பாணை நன்றியுடன் வாங்கிக் கொண்டான். நொண்டியனைப் பழி வாங்க இன்னொரு நாளை அந்தப்பாண் துண்டு அவனுக்குத் தரும். கிழவன் விடை பெற்றுக் கிராமப் புறமாக விரைந்து சென்றான். இருந்தாற்போல ஒரு எண்ணம் செங்காரன் மனதில் எழுந்தது. செருவரா ஒருத்தனைக் காட் டில் கண்டேன். என அவன் கிராமப்புறத்தில் சொல்ல, அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாகி பொலிஸ்வரை எட்டிவிட்டால்...? பெரிய பட்டாளமே இங்கு வந்துவிடலாம்.

பதவியாக்குளத்தின் அலைகரையில் தங்குவது புத்திசாலித் தனமல்ல. அவன் இலட்சியம் நிறைவேறும் வரை அவன் யானைகளைத் தொடரத்தான் வேண்டும். குன்றிலிருந் இறங்கியானை கள் சென்ற தடத்தில் விரைந்து நடக்கத் தொடங்கினான். 'வந்தனா என் வந்தனா' என்று உள்ளம் ஓயாது அழுதது.

பதவியாக் குளத்தின் அலைகரையிலிருந்து வடபுறமாக நெளிந்துநெளிந்து யானைகள் சென்ற பாதை இருந்தது. சதுப்பு நிலங்களை விலக்கி அவை சென்றிருந்தன. ஏறத்தாழ பதின் மூன்று மைல்கள் பதவியாக் குளத்திலிருந்து அவன் நடந் திருப்பான். இருள் சூழ்ந்து நிலவு பவனிவரத் தொடங்கிய வேளை யில் அவன் 'மாஓயா'வின் மற்றக் கிளையாறான கிற்றாகலஓயா வைக் கடந்தான். அக்கிளையாற்றில் யானைகள் சற்றுத் தமித்து நின்றிருப்பது தெரிந்தது. முறித்துப் போட்ட கிளைகள் பல கிடந்தன யானைகளுக்குப் பசி கிளம்பிவிட்டது என்பதை அவன் தெரிந்து கொண்டான். என்றாலும் அவை வழியில் எங்கும் தங்கி நிற்காது ஒரே மூச்சாக மாஓயாக் கிளையைத் தாண்டி வடக்கே சென்றிருந்தன. சிற்றாற்றில் நீரை அள்ளிக் குடித்துவிட்டு அவன் வெறியுணர்வுடன் தொடர்ந்தான். 'நொண்டியா இரு இரு வந்து கொண்டிருக்கிறேன். வந்தனா. அவன் நினைவில் அந்த யானை வந்தனாவைத் தூக்கிக் காலிலிட்டு உழக்கிய காட்சி நினைவில் வந் தது. உழக்கியது போதாதென்று பந்தாடுவதுபோல அவளைக் காலால் எற்றிய நிகழ்ச்சியும் நினைவு வந்தது. 'வந்தனா, நீ எப்படித் துடித்துச் செத்திருப்பாய்? உன்னைக் காக்கவேண்டிய நான் கோழைபோலப் பார்த்திருந்தேனே?'

''எனக்கு ஒரு சந்தேகம்'' என்றாள் வந்தனா;

''என்ன, வந்தனா?''

''நீங்க ஆண்பிள்ளை தானா?''

''சந்தேகமா? கண்ட படங்களையெல்லாம் பார்த்திட்டு அந்த போல கற்பனை செய்யாதை பெண்ணே. மானம் மரியாதை என்று எல்லாம் இருக்குது. கலியாணத்திற்குப் பிறகு ஆண்பிள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையோ இல்லையோ என்று தெரியும்.'' என்று அவன் சிரித்தான்.

''நான் அதைச் சொல்லவில்லை.'' என்று சிணுங்கினாள் வந்தனா.

''பின்னை எதைச் சொன்னாய்?''

''உங்களை இண்டைக்கு முருகேசு ஏசினானாமே? நீங்கள் சும்மா வந்தியளாம்.''

''அதையா? அவன் குடிகாரன் நான் ஒரு அடிகொடுத்தால் தாங்க மாட்டான். அவனுக்கு அடிப்பதற்கு ஆண்மை தேவையில்லை. நீயே போதும்.''

''அப்ப நான் ஆண் மாரியா?'' என்று கோபித்தபடி வந்தனா உள்ளே சென்றாள்.

'வந்தனா ஓ வந்தனா, எப்படிப்பட்ட உன்னை நான் இழந்து விட்டேன்!

அவன் தொடர்ந்து நடந்தான். பாதங்களில் முட்கள் தைத்த வேதனை இருந்தது. மேலும் இருமைல்கள் நடந்தான். பேரா ஆற்றை பாழடைந்த கல்மடுக்குளத்தின் அலைகரையினூடாகக் கடந்த யானைக்கூட்டம், காட்டு மருதன் குளத்திற்கும் மருதன் குளத்திற்கும் இடையில் பாழ்டைந்துகிடந்த 'றிசேவ்' காட்டினுள் புகுந்திருந்தன. தூரத்தில் மெல்லி பிளிறல் யசத்தம் கேட்டது. யானைகள் வெகுதூரத்தில் இல்லை. அருகில்தான் எங்கோ உணவிற்காகத் தங்கி நிற்கின்றன. அவனது கரம் துப்பாக்கியை வன்மத்தோடு பலமாகப்பற்றியது பாதையில் யானை லத்திக் கும்பங்கள் கிடந்தன. அவன் முன்னால் நிலம் மேடாக உயர்ந்தேறியது. அம்மேட்டில் ஏறி இறங்கி யானைகள் சென்றிருந்தன. காட்டு மரங்கள் அம்மேட்டில் நெருக்கமாக வளர்ந்திருந்தன. யானைகள் மிக ஒடுக்கமான பாதையில் ஒன்றன் பின் ஒன்றாகத் சென்றிருக்கின்றன. அருகில் மரங்கள் கிளைகள் முறிக்கப்படுகின்ற ஒலி கேட்டது. மேட்டில் ஏறி இறங்கினான். ஓடையொன்று குறுக்கிட்டது அதனைக் கடந்த போது மத்தியில் குட்டையாக நீரைக் கொண்ட பாழடைந்த குளம் ஒன்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்து கிடந்தது. அக்குள வெளியில் திக்குக் கொன்றாக யானைகள் நின்று மேய்ந்து கொண்டிருந்தன. நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை. அவன் காற்று வளத்திலில்லை. குட்டியானைகள் மூன்று தண்ணீரை அள்ளி துதிக்கையால் தாய் யானைகள் மீது விசிறி அடித்து விளையாடிக் கொண்டிருந்தன. அவன் இம்முறை சரியான மேட்டில் தான் இருந்தான்.

'நொண்டியா, நீ எங்கே?

'வந்தனா. இன்று பழி தீர்ப்பேன்!'

## ஒன்பது

அவன் இருந்த மேட்டுக்குப் பின்பக்கமிருந்து சருகுகள் கலகலக்கும் சத்தமும் கிளைகள் முறியும் சத்தமும் எழுந்தது. செங்காரன் நிலைமையைப் புரிந்து கொண்டான். யானை யொன்று வருகின்றது என்பதில் ஐயமில்லை. நொண்டியனோ? அப்படியாயின் அவன் எப்படி முந்தி வந்தான். மனிதவாடையை நன்கு அறியக்கூடிய யானை அது. செங்காரன் விருட்டென எழுந்து மேட்டின் உச்சியில் வலது பக்கமாக ஊர்ந்து மறைந்து சென்றான் செடிகளை விலக்கிக்கொண்டு சென்றான். இருபது யார் தூரம் சென்றிருப்பான். அவனுக்கு மிக அருகில் கிளைகள் முறியும் சத்தமும் காதுகளை வேகமாக அடித்துக்கொள்ளும் சத்தமும் கேட்டது. செங்காரன் கவனமாகப் பின்வாங்கினான். அதே வேளை துப்பாக்கியையும் மிக அவதானமாகப் பிடித்துக் கொண்டான்.

நல்ல வேளை அவன் போக்கில் பெரியதொரு மருதமரம் குறுக்கிட்டது. அதன் வேர்கள் நான்கு அடிகளுக்குமேல் சுவராக நிலத்தில் படர்ந்திருந்தன. மின்னல் வேகத்தில் அவ்வேர்ச் சுவரில் தாவிக் குதித்துத் தன்னை மறைத்துக்கொண்டான். அந்த வேர்ச்சுவர் அவனை சுற்றி சுவராக இருந்தது. தாய் மரம் குளத்தின் பக்கமாகச் சரிந்திருந்ததாலும் அடிப்புறத்தில் உட்குடைந்த கோறை இருந்ததாலும் அவன் புகுந்த இடம் அற்புதமான ஒரு குகை போன்றிருந்தது. காற்று அவன் மணத்தை வெளியில் பரப்பாது.

'நொண்டியா, வா—' வேர்ச்சுவருக்கு மேலாக மெதுவாக அவன் தனது தலையை உயர்த்திப் பார்த்தான். அவன் முதலில் இருந்த இடத்திற்கு முப்பது யார்களுக்கு அப்பால் கரிய மலை யொன்று மேட்டில் ஏறிநிற்பது நிலவில் பூரணமாகத் தெரிந்தது. அக்கரிய உருவத்தின் உயரம் பத்தடிகளுக்கு மேலிருக்கும். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட தந்தங்கள் நிலவின் கதிர் ஒளியில் பளிச்சிட்டன. அது மிக்க ஆவலுடன் குளவெளியில் மேய்ந்து கொண்டிருந்த யானைக் கூட்டத்தைப் பார்த்தது.

அது நொண்டியன் அல்ல. நொண்டியன் குள தில்தான் நிற்கவேண்டும். அப்படியாயின் இது? இது அக்கூட்டத்து யானை யாகத் தெரியவில்லை. இப்போது என்ன செய்வது?

இருந்தாற்போல நிலவைக் கருமுகில் மறைத்தது. சில்லென்ற காற்று வேறு வீசத்தொடங்கியது. செங்காரன் வானத்தைப் பார்த்தான். அலம்பில் பக்கமிருந்து கருமேகத்திரள் ஒன்று வேகமாக வானத்தைக்கவ்வியபடி தென் கிழக்குத் திக்கில் வந்தது. மழை பொழியப் போகின்றது.

திடீரெனக்கிளம்புவதைப் பார்த்தால் புயலாக இருக்குமோ? எண்ணமுடியவில்லை. கீழை அடி வானத்தில் கண்களைப் பறிப்பது போல மின்னல் கிளைபரப்பி அழிந்தது, மேட்டில் நின்றிருந்த யானை ஒரு கணம் சிலிர்ப்படைந்தது தெரிந்தது. அதனைத் தொடர்ந்து எழுந்த இடியோசை அதனைப் பீதி கொள்ள வைத்தது. குளவெளியில் மேய்ந்து கொண்டிருந்த யானைக்கூட்டமும் மின்னல் ஒளியால் பயந்ததுபோலக் காணப் பட்டது. அவற்றின் பீதியை தூரத்தில் எழுந்த இடியோசை அதிகமாக்கியது.

அவை, தாம் நின்ற இடங்களிலிருந்து அசைந்து ஒரு புறமாக ஒதுங்கி ஒருங்கு சேர்ந்து நின்றன அவற்றின் முன் அக்கூட் டத்தின் பெரியயானை பிறை வடிவில் ஒரு தடவை கம்பீரமாக நடந்தது. நொண்டியன் காட்டெல்லையிலிருந்து மெதுவாக பின்னங்காலை இழுத்து வருவதை அவன் கண்டான். வெகு தூரம். துப்பாக்கி தைக்க வாய்ப்பில்லை. இறங்கிச் செல் வதற்கு வழியில் வேறொரு பெரிய கரியன் நிற்கிறது,

மின்னல் ஒளி மீண்டும் பரவியது, மின்னல் ஒளியில் செங் காரன் மேட்டில் நின்ற யானையில் ஒரு வித்தியாசத்தைக் கண்டான். அந்த யானைக்கு முப்பத்தைந்து வயதிற்கு மேலி ருக்கும். மனிதனின் ஆயுளும் யானைகளின் ஆயுளும் ஒரேயள வினதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டுக்கரியனின் கண்ணடியில் கருமையான நீர் கசிந்திருப்பதைக் கண்டான். கண்ணிற்கு அருகிலும் வயிற்றுப்புறத்திலும் உள்ள மதநீர்ச்சுரப்பிகளிலிருந்து, மதநீர் பருவ வயதில் யானைகளுக்குச் சிறிதுசிறிதாகச் சுரக்குமென அவன் அறிவான். ஆண்யானைக்கு ஏற்படும் உணர்ச்சி வேட்கை சரியாகத் தீர்க்கப்படா விட்டால் இப்படி மதநீர் சுரக்கும் என அவன் அறிவான். மேட்டில் நின்றபடி யானைக் கூட்டத்தை அது பார்க்கின்ற பார்வையில் தெரிகின்ற வேட்கை. கண்ணடியிலிருந்து கசிந்த மதநீர் அந்த யானையின் வாய்க்குள் இறங்கியது. அது அதைச் சுவைத்துச் சுவைத்து, அதன் ஆத்திரம் உச்சநிலையை அடைந்திருக்க வேண்டும்.

அது பெருங்குரலில் பிளிறியது. பிளிறல் ஒலி அப்பிரதேசத்தையே கலக்கியது. அதேவேளை வானத்திலிருந்து மழைத்துளிகள் சடசடவென நிலத்தில் விழத்தொடங்கின. செங்காரன் நிலைமையைப் புரிந்து கொண்டான். குளவெளியில் பெரும் போர் ஒன்று நிகழப்போகின்றது. அவன் தன்மீது மழைத்துளிகள் படாதவாறு தன்னை மரத்தின் கீழ் மறைத்துக் கொண்டான்.

மேட்டிலிருந்து பிளிறிய யானை பெரும் வேகத்துடன் குளவெளியில் இறங்கியது. வாலை நிமிர்த்தியபடி யானைக் கூட்டம் நின்ற பக்கமாக விரைந்தது. கூட்டத்திற்கு முன் நின்றிருந்த பெரியயானை தனக்கு வந்து கொண்டிருக்கிற போட்டியைக் கண்டது. அதுவும் பெருங்குரலில் பிளிறியபடி முன் ஓடி வந்தது. கூட்டத்தலைவன் அளவிலும் வலிமையிலும் மதநீர் சுரக்கும் கரியனிலும் பார்க்கப் பெரியது என்பதை செங்காரன் கண்டான். பெண்களுக்காகப் போட்டியா? 'வந்தனா' உன்னை அடைய நான் ஒருவன்தான் போட்டியிட்டேன், வந்தனா — வந்தனா —, குளிரில் உடல் நடுங்கியது.

உணர்ச்சி வெறி, தன் பலத்தைக் கணிக்கக் கரியனை விடவில்லை. மழைபொழிகின்ற அந்த விடிகாலைப்பொழுதில் இரண்டு யானைகளும் உக்கிரமாகச் சண்டையிட்டன. நிலம் தாழ்ந்து சேறாகியது. ஒன்றையொன்று தமது தந்தங்களால் குத்திக் காயப்படுத்திக் கொண்டன. பின்னால் சென்று முன்பறமாக வேகமாக விரைந்து வந்து ஒன்றுடன் ஒன்று பண்டைகளால் மோதிக் கொண்டன. பெரும் பாறைகள் இரண்டு மோதியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலச் சத்தம் எழுந்தது. மற்ற யானைகள் சண்டையைப் பார்த்துக் கொண்டு நின்றன. ஏதுவும் தலைவனுக்கு உதவ முன் வரவில்லை.

'மெதுவாக எழுந்து சென்று நொண்டியனுக்கு வெடிவைப்பமா?' கனத்த மழை சோனாவாரியாகப் பொழிந்தது. அவன் இருந்த மேட்டின் உடைப்பு வழியாக வெள்ள நீர் குளத்தில் சேரத்தொடங்கியது. இந்த மழையில் இறங்கிச் செல்வது அறிவுடைமையாகாது. மழை துப்பாக்கியையும் நனைத்து தோட்டாக்களையும் பாழாக்கிவிடலாம். பிறகு அவன் எங்கு போவான்? இப்போது இருப்பது போன்ற பாதுகாப்பான இடம் கிடைக்காது.

சண்டையில் கரியன் தோற்றான். அதன் மண்டை முன்பக்கம் பிளந்தது போல கனத்த தோல் வெடித்துக் கரிய இரத்தம் பாய்ந்தது தலைவன் யானையின் தந்தங்கள் அதன் உடலில் குத்திக் கிழித்திருந்தன, தோல்வி கண்ட கரியன் வேகமாகத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக காட்டிற்குள் புகுந்தது. தலைவன் யானை வெகு கம்பீரமாக பிளிறியது. சில யானைகள் அதனைத் துதிக்கைகளால் தடவிக் கொடுத்தன. 'வந்தனா, என் வந்தனா உன்னைக் காப்பாற்ற வக்கில்லாமல் போனேனே!'

நொண்டியனுக்கு வெடி வைப்பதில் புதிய ஒரு ஆபத்துக் கூடிவிட்டதை செங்காரன் உணர்ந்தான். காயப்பட்டு ஓடிய யானை இக்கூட்டத்தைவிட்டு விலகிச்செல்லாது. சுற்றாடலில் சுற்றிச் சுற்றித்தான் வரும். அதன் காயங்கள் மாறியதும் மீண்டும் சண்டைக்கு வரும். சண்டை அது இறக்கும் வரை ஓயப்போவதில்லை. அதற்கு ஒரு பெண் வேண்டும். ஒரு பெண்ணிற்காக அது அழியவும் தயாராகி விட்டது.

'வந்தனா என் உயிரே, டேய் நொண்டியா!'

கண்கள் எப்படி மூடின என்று அவனுக்கு தெரியவில்லை. அவனை உறக்கம் சிறிது நேரம் தழுவியது. கண் விழித்துப் பார்த்த போது குளவெளி வெறிச்சோடிக் கிடந்தது. ஒரு யானையையும் காணவில்லை.

அவன் துள்ளி எழுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்து

குளவெளி முழுவதும் யானைகளின் காலடிச் சுவடுகள் தென்பட்டன, அவை எவ்விடத்தில் காட்டிற்குள் புகுந்தன என்பதைக் கண்டுபிடிப்பதற்கு செங்காரனுக்குச் சற்று நேரம் எடுத்தது. கிழக்கு வானில் ஆதவன் எழுந்து கொண்டிருந்தான். புதற்காடைகள் சில இறகுகளைச் சிலிர்த்துக் கொண்டன. தூரத்தில் பழுப்பு நரியொன்று குளவெளியில் இறங்கியது.

குளவெளியின் வடபாகத்தில் யானைகள் சென்ற தடம் தெரிந்தது. அவை அவ்வழியே சென்றிருப்பதைச் சேற்றில் படிந்த பாதங்கள் நன்கு காட்டின. செங்காரன் அப்பாதையில் விரைந்து சென்றான். மழையின் ஈரலிப்பும் யானைகள் சென்றதால் ஏற்பட்ட சதுப்பும் அவன் வேகமான நடையைக் கட்டுப் படுத்தின.

'வந்தனா...'

ஏழு மைல்கள் காட்டுமருதன் குளத்திலிருந்து நடந்திருப்பான். நடுக்குளத்திற்கு அருகாக யானைகளின் தடப்பாதை ஒரு மேட்டில் ஏறியது.

❀

''இப்படியா சேற்றுக்குள் உருண்டு விட்டு வருவார்கள்?''

''என்ன வந்தனா, இப்பதான் சேற்றுழவு முடிந்தது, மாடு களைக்கட்டிவிட்டு வாறன்.''

''உங்களைப் பார்க்க முடியாமல் இருக்குது.''

''கமக்காரன் அப்படித்தான் இருப்பான். உனக்குப் பிடிக்க வில்லையென்றால் நல்ல உத்தியோகத்தனாகக் கட்டிக்கொள் எனக்கு ஆட்சேபனையில்லை.''

அவள் அவனைக் கோபத்துடன் பார்த்தாள். மறுகணம் கண்கள் கலங்கித்தவித்தன. விருட்டென உள்ளே சென்று விட்டாள். பின்னர் அவளைச் சமாதானப்படுத்த அவன் பட்ட பாடு. வந்தனா...

❀

செங்காரன் வாய்விட்டு 'வந்தனா' என்றான். கண்கள் கலங்கி இதயத்தில் [illegible] நொந்தது. 'டேய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொண்டியா நொண்டியா, எளியவா, உன்னைக் கொல்லாமல் விடமாட்டன்.''

வயிற்றில் பசி பூதாகாரமாகக் கிளம்பியது. ஏதாவது சாப்பிட்டாக வேண்டும்.

'நான் பட்டினி கிடந்தே செத்துப்போவேன். ஆனால் பழி வாங்காமல் சாவதா?'

காலடிச்சத்தமே எழாமல் அவன் நடந்து சென்றான். சருகுகள் நனைந்து கிடந்ததால் சத்தம் எழவில்லை. பாதையின் போக்கில் இடப்பக்கம் குறுக்கிட்ட வெட்டை ஒன்றில் காட்டு முயல் ஒன்று வளர்ந்திருந்த புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. அதனைக்கண்டதும் அவன் மரத்துடன் மறைந்து கொண்டான். அவன் வந்ததை அது காணவில்லை. நிலத்தோடு நிலமாக இருந்து அது மேய்ந்தது. தோளில் அணைத்தபடி வெடி வைப்பதற்குச் சாதகமாகவில்லை. அதனை இரண்டு காலில் உயரச் செய்யவேண்டும் குறி பார்த்தபடி பட்ட மரக்கொப்பர் ஒன்றை சடக்கென முறித்தான் அவன் சத்தம் கேட்டதும் மேய்ந்து கொண்டிருந்த முயல் தலையை உயர்த்திப் பார்த்தது அவ்வளவு போதும். குறி தவறாது சன்னம் அதன் உடலில் பாய்ந்தது சிறு முனகல் கூட இன்றி அது ஒரு தடவை உயர்ந்து விழுந்தது.

அதனை அவன் தூக்கிக் கொண்டு தடத்தில் நடக்கத் தொடங்கினான்.

முயலுக்கு அவன் வைத்த வெடி அக்காட்டைச் சிலகணங்கள் கலங்கிவிட்டது. மரங்களில் அமர்ந்திருந்த பறவைகள்கள் வெருட்சியுடன் வானில் கிளப்பின. குரங்குக்கூட்டம் ஒன்று அமைதியிழந்து திக்குத்திசை தெரியாமல் கிளைதாவிற்று.

அடர்ந்த காட்டின் நடுவே விசரன் போல விரைகின்ற அந்த மனிதனை பற்றை நிழலில் இளைப்பாறிக் கொண்டிருந்த நரிகள் சில வியப்புடன் பார்த்தன.

அவன் ஒருமணிநேரம் வரை எல்லாவற்றையும் மறந்து நடந்தான்; முயலின் உடலில் இருந்து வழிந்த இரத்தத்துளிகள் பாதையின் சேற்றில் திட்டுத்திட்டாக விழுந்தன. யானைகள் சென்ற தடத்தின் போக்கில் மீண்டும் ஒரு வெட்டையின் முடிவின் ஒரு குளத்தின் [illegible] இருந்தது. இரவு பெய்த

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலையின் சுவட்டை அந்த வெட்டையில் அவனால் காணமுடியவில்லை. ஆனால் வெட்டையின் ஈரலிப்பு முற்றாக மடியாததால் யானைகளின் அடிச்சுவடுகள் தெளிவாகத் தெரிந்தன.

'நொண்டியா, நீ எங்க ஓடப்போறாய்? உன்னை அழிக்காமல் நான் அழியமாட்டேன்!'

வெட்டையின் ஓர் ஓரத்தில் பாறைப்படுக்கை ஒன்று கிடந்தது. பாறையின் குண்டில் தெளிவான நீர் தேங்கி நின்றது. செங்காரன் அப்பாறையில் அமர்ந்தான். குண்டில் இருந்த நீரில் அள்ளி வயிறு நிறைய அருந்தினான். முயலை எட்படியாவது வாட்டிச் சாப்பிடத்தான் வேண்டும். இரண்டு நாட்களாக அவன் சாப்பிடவேயில்லை. தேங்காயும் பாணும் எவ்வளவு நேரம் பசி தாங்கும்? முயலின் குடலை நீக்கினால் போதும். நெருப்பில் வாட்டிவிடலாம். கூரான கற்கள் உதவாது? காய்ந்த சுள்ளிகளைப் பொறுக்கி பாறைகளில் கும்பலாகக் குவித்தான். நுனி கூரான தடி ஒன்று அகப்பட்டது.

அது முயலின் தோலைக் கிழித்து குடலை நீக்கப் போதுமானதாக இருந்தது. பன்றியை வாட்டுவதுபோல முயலை வாட்டி எடுத்தான் செங்காரன். தணலில் முயலின் கருகிய உடலைப் போட்டுவிட்டு கலங்கத் தொடங்கினான் அவன்.

'வந்தனா.'

வானத்தில் பறந்து வட்டமிட்ட கருடன் ஒன்று திடீரெனத் தன் இரை ஒன்றின் மீது இறங்கியது. வெட்டையில் நெளிந்து கொண்டிருந்த பாம்பு ஒன்று அதன் கால் நகங்களில் சிக்கிக் கொண்டது. திடீரென வானில் எழுந்த அது அதி உயரத்திற்குப் பறந்து, பொத்தென கால் நகங்களில் கவ்வியிருந்த பாம்பை நழுவவிட்டது. வானத்தில் நெளிந்து உருண்டபடி நிலத்தை நோக்கி வேகமாக விழுந்த பாம்பு, தரையில் பாறையில் மோதி உயிரைவிட்டது. மெதுவாக மீண்டும் கீழிறங்கிய கருடன் செத்துக் கிடந்த பாம்பைக் கால்களால் பற்றிக் தூக்கிக்கொண்டு வானத்தில் மகிழ்ச்சியுடன் கிளம்பியது.

ஒன்று பசி. மற்றது காதல். இங்கு பசிக்காகப் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு அங்கு காதலுக்காகப் போராட்டம். 'நான் வந்தனா எனக்கினிப் பசியேது? காதலேது?'

'நொண்டியா நான் இங்கே அமர்ந்து பொழுதைக் கழிக்கிறேன்.'

தீயில் வாட்டிய முயலை மீண்டும் பார்த்தான். அவனுக்குச் சாப்பிடவேண்டும் என்ற எண்ணமே வரவில்லை. நீரை அள்ளிப் பருகிவிட்டு வேகமாக நடக்கத் தொடங்கினான். இறைச்சி வாட்டிய மணத்திற்கு வெட்டையில் ஏறிக்காத்திருந்த நரி பாறையை நோக்கி வந்தது.

'வந்தனா, என் வந்தனா, நீ இப்போது எங்கே?'

அங்கிருந்து இரண்டு மைல்கள் நடந்திருப்பான். மேல பறைஞ்சான்குளம் குறுக்கிட்டது. குளத்தின் கரையில் அவன் நின்றபோது இரவு ஆரம்பமாகிக் கொண்டிருந்தது. மேல பறைஞ்சான் குளமேட்டில் ஏறிய யானைக் கூட்டம் வடமேற்காக இரு மைல்கள் நடந்து, நயினாமடுவுக்கும் குறிசுட்டானுக்கும் இடையில் பிரதான வீதியைக் கடந்து சென்றிருந்தன. அவன் தொடர்ந்து சென்றான். வீதியை ஏறிக்கடக்கும் போது இடது பக்கமாக ஒரு நூறுயார்களுக்கு அப்பால் ஒரு சிறிய கடை இருப்பது தெரிந்தது. விளக்கொன்று மின்னி மின்னி எரிந்து கொண்டிருந்தது சாப்பிடுவதற்கு ஏதாவதுகிடைக்கலாம். சூடாக ஏதாவது கிடைக்கலாம்.

❋

"தேத்தண்ணி ஆறுது கெதியாக் குடியுங்கோ."
"பொறு வந்தனா முகம் கழுவிவிட்டு வந்து குடிக்கிறன்."
"குடிச்சிட்டுப் போய் முகத்தைக் கழுவுங்கோ"

❋

'வந்தனா வந்தனா' கண்கள் கலங்கிக் கொண்டிருந்தன. அவன் அச்சிறு கடையை நோக்கிச் சென்றான். காட்டோரத்தில் சிறு துண்டு காணி வெட்டி ஒரு குடும்பம் அதில் குடியேறி இருந்தது வீதியோரத்தில் அவ்வழியே போய் வரும் பிரயாணிகளுக்காக சிறு தேநீர் கடையொன்றையும் நடாத்தினர். கடையில் ஒரு கிழவர் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, என்ன வேட்டைக்குப் போறிரோ? இன்டைக்கு எப்பவும் இல்லாத அதிசயமா பட்டப்பகலில் ஒரு கூட்டம் யானை மந்தை கரடியன் ஆத்துப் பக்கம் போச்சுதுகள். இந்த நேரம் பார்த்துத் தம்பியும் வேட்டைக்குக் கிளம்பியிருக்கிறீர்."

"ஏதாவது சாப்பிட இருக்குதே பெரியவர்?"

"ஒண்டுமில்லைத் தம்பி, இரும் இரும். இரண்டு வாய்ப்பன் இருக்குது சாப்பிடும். சூடா தேத்தண்ணி தாறன்" இரண்டு வாய்ப்பனும் தேத்தண்ணியும் தேவாமிர்தமாக இருந்தன. மீண்டும் ஒரு தேத்தண்ணி வாங்கிக் குடித்தான். ஏறத்தாழ எழுபது மைல்கள் வரை அவன் தம்பலகாமத்திலிருந்து காட்டின் ஊடாக நடந்து வந்திருக்கிறான்.

"என்னட்ட காசில்ல பெரியவர் இந்த தோட்டா ஒன்றைத் தாறன்."

'இது இப்ப பத்துப்பதினைந்து ரூபா போகும் தம்பி. என்னட்ட மிச்சக் காசில்லை."

"மிச்சக்காசு வேண்டாம்." தோட்டாவொன்றை கிழவனிடம் கொடுத்துவிட்டு, அவன் விட்ட இடத்திற்கு நடந்து வந்தான் வானத்தில் நிலவு சற்றுத் தேய்ந்து காட்சி தந்தது. யானைகள் கரடியன் ஆற்றை நோக்கிச் சென்றிருக்கின்றன. 'நொண்டியா, எனக்கு இப்ப நீ எதிர்ப்படவேண்டும். தப்ப மாட்டாய். தப்ப விடமாட்டன்'

கரடியன் ஆற்றின் இடது கரையோரமாக யானைகள் வடபுறமாகச் சென்றிருந்தன. ஆற்றில் நீரில்லை. மணல் திட்டாகக் கிடந்தது. அக்காட்டின் ஊடாகச் சென்றால் அன்னதேவன் மடுவை அடையமுடியும். ஒரு மணி நேரம் நடந்திருப்பான். யானைகள் சென்றுதான் இருக்கின்றன. அவன் வைரி நொண்டியனின் இமுனைக் காலடியும் தெளிவாகத்தெரிந்தது. நடுநிசி வரை தடயத்தைத் தொடர்ந்த செங்காரன் காலோய்ந்து ஓரிடத்தில் அமர்ந்து கொண்டான். சில் வண்டுகள் ஓயசமல் இரைச்சலிட்டுக் கொண்டிருந்தன. இராப்பறவையொன்று 'க்லாக் க்லாக்' என்று சத்தம் எழுப்பிக் கொண்டிருந்தன.

இருந்தாற்போல் கெட்ட நாற்றம் ஒன்று காற்றில் வீசுவதை அவன் உணர்ந்தான். அந்த நாற்றம் அவன் வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் வருவதாகப்பட்டது. சடசடவென மரக்கிளைகள் ஒடிகின்ற சத்தமும் கேட்டது. தூரத்தில் ஆள்காட்டி குருவி யொன்று அவலமாகச் சத்தமிட்டு காட்டை எச்சரித்தது. செங்காரன் டக்கென்று எழுந்துவிட்டான். அவன் எதிர்பார்த்த ஆபத்துத்தான்.

நாற்றத்தின் காரணம் அந்த அனுபவ வேட்டைக்கார னுக்குப் புரிய வெகுநேரமெடுக்கவில்லை. மதநீர் நாற்றமெடுக்க கரியன் யானை, தனி அலியனாக யானைக் கூட்டத்தைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. அதற்கும் அவனுக்கும் என்ன வேறுபாடு? இரண்டும் பழி வாங்கத் திரிகின்றன.

காதுகள் காற்றில் படபடவென ஓசையெழுப்பின. செங்கா ரன் வேகமாக முன்னோக்கி ஓடத்தொடங்கினான். ஒரே ஓட்டப். அவன் ஓட்டம் மாங்குளம் — ஒட்டிசுட்டான் பிரதான வீதியை அடையும் வரை நிற்கவில்லை. அடைப்பன் குளத்தை அடுத்து அவன் வீதியில் ஏறினான். குளக்கட்டில் சோர்ந்து போய் அமர்ந் தான். நாற்றம் இப்போது வீசவில்லை. தனியன் திசை மாறி விட்டது.

## பதினொன்று

வீதியில் விரைந்த முதல் பஸ்ஸின் ஒலி செங்காரனைத் தட்டி எழுப்பிவிட்டது.

'வந்தனா, உன்னை மறந்து தூங்கிவிட்டேன்.'

அவனுடலில் வந்தனாவின் நினைவு ஒரு கணம் பிரளயமா கக் கொந்தளித்தது. யானையின் காலடியில் அவள் பிணமாகக் கிடக்க, நொண்டியன் தன் காலால் அவளைப் பந்தாடி — 'நொண்டியா!'

'விடமாட்டேன் உன்னை உயிரோடு விடமாட்டேன்!'

அவன் குளக்கட்டிலிருந்து வேகமாகக் கீழிறங்கினான். புதிய தொரு பிரச்சினை குறுக்கிட்டது. சரடியன் ஆற்றைக் கடந்த யானைக் கூட்டம், இக்காட்டில் எத்திக்கில், எத்தடத்தில் சென் றிருக்கும்? மதயானைக்குப் பயந்து ஓடிவந்து வீதியில் ஏறிய அவனால் யானைக் கூட்டத்தின் தடத்தைக் காண்பது இலகுவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமாகத் தெரியவில்லை. மீண்டும் பழைய இடத்திற்கே செல்ல வேண்டுமோ? அதுவும், இக் காட்டில் இலகுவான காரியமாகத் தெரியவில்லை.

இரவில் பயந்து ஓடிவந்த போது முட்கள் அவன் உடலில் பலவிடங்களில் கிறிக்கிழித்திருந்தன. அவை இரத்தம் காய்ந்து வேதனை தந்தன. அவன் சிந்தனையுடன் நின்ற போது, குளத்தின் அலைகரைப்பக்கமிருந்து இருவர் வருவது தெரிந்தது. இரவு வேட்டைக்குப் போய் வெறுங்கைகளுடன் வருவது தெரிந்தது. அவர்களில் ஒருவன் ஒரு துப்பாக்கியும், மற்றவன் ஒரு ரோசலையிற்றும் வைத்திருந்தனர். எதிரில் ஒருவன் இரட்டைக்குழல் துப்பாக்கியுடன் நிற்பதைக்கண்டு அவர்கள் ஒருகணம் திடுக்குற்றனர்.

''இங்காலப்பக்கம் ஏதாவது யானைக்கூட்டம் ஒன்றைப் பாத்தியளா?'' என்று செங்காரன் அவர்களைக் கேட்டான். அவர்கள் வியப்புடன் அவனைப் பார்த்தனர்.

''அதைக்கண்டிட்டுத்தான் பயந்து, வேட்டையையும் விட்டிட்டு ஓடிவாறம். ஒரு நொண்டி யானைச் சனியனிட்ட அகப்பட இருந்தம். நல்லகாலம் அருந்தப்பு.'' என்றான் அவர்களில் ஒருவன்.

''எங்க கண்டியள்? எங்கை?'' என்று செங்காரன் ஆவலுடன் கேட்டான்.

''பாலன் வெளிக்குளத்து அலைகரையில் சந்தித்தம். அவையள் கனகராயன் ஆத்துப்பக்கமாகப் போகினம்.''

''ஏன் கேட்கிறீர்?''

''அதில் ஒரு யானையைச் சுட.''

''மதயானையே? 'ஜி ஏ.ஸ்ர ஒடராக்கும். நான் நினைச்சன்! இப்படியே இந்த பாதையில் ஓரிடமும் திரும்பாமல் நேராகப் போம். பாலன் வெளிக்குளம் வரும்.''

இவ்வளவும் செங்காரனுக்குப் போதுமானவை. அங்கிருந்து யானைக் கூட்டத்தின் தடப்பாதையைக் கண்டுபிடிப்பது இலகு.

''இங்கையிருந்து இரண்டாம் கட்டைக்கு மேல் போக வேண்டும்.'' என்றபடி அவர்கள் வீதியில் ஏறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்காரன் துரிதமாக நடக்கத் தொடங்கினான். பாலன் வெளிக்குளத்தை அடைந்து, அங்கிருந்து யானைகளின் தடப்பாதையைக் கண்டுபிடித்து, வடமேற்காகச் சென்று கனகராயன் ஆற்றின் கரையை அடைந்தான்.

கனகராயன் ஆறு ஏறத்தாழ அறுபது மைல்கள் நீளமானது. இலமருதன் குளத்திற்கு வடக்கே சேமமடுக் குளத்திலிருந்து தோற்றம் பெறும் இந்த ஆறு வடக்காகப் பாய்ந்து இரணைமடுக்குளத்தை நிரப்புகின்றது. பின்னர் இரணைமடுவை விட்டு வெளியேறி ஆனையிறவுக்கடலில் சங்கமமாகின்றது. மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில், கனகராயன் ஆற்றுக்குக் குறுக்காக இடப்பட்டிருந்த பாலத்தடியில் சோர்ந்துபோய் செங்காரன் கிடந்தான். பத்தடி கீழே ஒடுங்கிய பள்ளத்தாக்கில் ஆறு மெல்லிய ஓடையாக ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் இரு கரைகளிலும் ஓங்கிய மரங்கள் வளர்ந்து நிழலிட்டிருந்தன.

அவன் வேகமாக ஆற்றின் சரிவில் இறங்கினான். ஆற்றில் அள்ளி நீரைக்குடித்துவிட்டு யானைக்கூட்டத்தின் தடத்தைத் தேடினான். சிறிது நேரத்தின் பின்னர் தடம் தெரிந்தது. நேர் வடக்காக ஆற்றின் வலது கரையோரமாக அவை சென்றிருந்தன ஆற்றின் ஒடுங்கிய பாதையில் நடப்பது இலகுவாக இருந்தது. அதனால் ஆற்றுப்படுக்கையில் நடந்தான். நான்கு மைல்கள் நடந்திருப்பான். அவ்விடத்தில் யானைகள் ஆற்றைக்கடந்திருப்பது தெரிந்தது. அவை எங்கு செல்கின்றன? அவற்றின் பிரயாணத்தை அவன் பின்தொடரல் துரிதப்படுத்தியிருக்குமோ?

கனகராயன் ஆற்றைக்கடந்து அவன் காட்டிற்குள் புகுந்தான். தண்ணீர் குடிக்க அப்பாதையில் வந்த காட்டுப் பன்றியொன்று அவனை எதிரில் கண்டதும் வெருண்டு தெறிகெட்டு ஓடியது. பாலைப்பழங்களைச் சுவைத்துக் கொண்டிருந்த குரங்குகள் அவனை அலட்சியமாகப் பார்த்தன. ஒரு கூட்டம் கிளிகள் கத்தியபடி வயல்களை நாடித்திரளாகப் பறந்து சென்றன.

கனகராயன் ஆற்றின் கிளையாற்றை யானைகள் கடந்திருந்தன. சிற்றாற்றில் நீரில்லை. ஆற்று மணல் பரப்பில் யானைகளின் லத்திகள் கிடந்தன. லத்திக்கும்பத்தின் அளவில் அவை நன்கு சாப்பிட்டு கொண்டிருப்பது தெரிந்தது. ஒரு மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், ஒரு மதங்கொண்ட மிருகமும் தொடர்ந்து துரத்திப்பழி வாங்க வரும்போது அவை எங்கு நிம்மதியாகத் தரித்து நின்று மேயமுடியும்?

யாரோ காடழித்துக்கைவிட்ட புலவுகள் வழியில் வந்தன. பொய்க்காடு வளர்ந்து அவை கிடந்தன. யானையின் பாதையில் காடுவெட்டிக்கழனியாக்க முயன்றதால் இவை கைவிடப் பட்டனவோ? காட்டின் மரங்களுக்கும் கொடிகளுக்கும் இடையில் யானைகளின் அடிச்சுவட்டில் நடக்கும்போது தெரியாத கஷ்டம், பொய்க்காடு வளர்ந்த புலவுத்தரையில் நடக்கும்போது தெரிந்தது அவன் களைப்படைந்து விட்டனா? 'இல்லை வந்தனா. என்னுடல் களைப்படையலாம். என் உள்ளம் ஒருபோதும் களைப்படை யாது? உன்னைக் கொன்றவனை உயிர் குடிக்கும் வரை நான் ஓயமாட்டேன். என் உள்ளம் ஓயாது.'

'வந்தனா, நீ செத்துவிட்டாயா? உன்னை, என்னுயிரே, என்னுயிரே, இனி நான் காணமுடியாதா?'

ஃ

"வந்தனா"

"என்ன?"

"எனக்கொன்று வேண்டும் தருவாயா?"

அவள் முகம் குப்பெனச் சிவந்தது.

"போங்க" என்று தலைகுனிந்தாள்.

"நான் என்ன கேட்டன்? நீ ஏன் இப்படி நெளிகிறாய். வந்தனா?"

அவள் அவனைக் கோபத்துடன் பார்த்தாள்.

"என்ன கேட்டியள்?

"உன் படம் ஒன்று கேட்டன். உவருக்குப் போறன் ஆச்சிக் குக் காட்டிவர" அவன் முகம் ஏமாற்றத்தால் கூம்பியது. அவள் சிரித்தாள். அவளை அப்படியே இழுத்துத் தன்னுடன் அணைத்துக் கொண்டான்."

"அதை நீயாகத் தரத்தேவையில்லை. வந்தனா — நானாகவே எடுத்துக்கொள்வேன். கேட்காமல் —" என்று அவள் முகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்த்தி—'வந்தனா ஓ என் வந்தனா, என் அன்பே, உன்னை அநியாயமாக இழந்து விட்டேனே?''

''நொண்டியா, உனக்கு நான் என்ன கெடுதல்செய்தேன்?''

❀

கண்டி-யாழ்ப்பாணம் வீதியில் பதினெட்டாம்போர். என்ற இடத்திற்குச் சற்று தெற்கே யானைகளின் தடப்பாதை ஏறியது. அவன் வீதியில் ஏறினான், முகத்தில் முட்களாகத் தாடி, கண்கள் உறக்கமின்றி வீங்கிச் சிவந்திருந்தன. தலை பரட்டை பற்றிக் கிடந்தது. சாறமும் சேட்டும் அழுக்கேறி முட்கள் கிழித்து அலங்கோலமாகக் கிடந்தன.

அவன் வீதியில் ஏறியபோது வீதியில் ஒரு பஸ் நிற்பது தெரிந்தது, பஸ்ஸில் வந்த சனங்கள் இறங்கி ஓரிடத்தில் குழுமி நின்று வீதியின் அருகில் கிடந்த ஒன்றை ஆவலுடன் பார்ப்பதைக் கண்டான். வீதியில் யானை லத்திக் கும்பம் ஒன்று கிடந்தது.

அவன் வீதியில் தயங்கி நின்றான்.

''என்ன விசயம்?—'' என்று ஒருவரிடம் கேட்டான்.

''ஒருத்தனை யானை அடிச்சிட்டுது. பிணம் கிடக்குது.''

செங்காரன் இதயத்தை திடீரென ஒரு பாறை தாக்கியது. பாய்ந்து ஓடிச்சென்றான். பார்த்துக்கொண்டிருந்த சனங்கள் விலகி வழிவிட்டனர். வீதியோரத்தில் ஒரு இளைஞனின் பிரேதம் கிடந்தது. உடலில் ஆடையில்லை. தூரத்தில் சாறம் ஒன்று தொங்கியது. வீதியில் இரத்தம் உறைந்துகிடந்தது. இடுப்பிலிருந்து அவன் வலது கால் மிதித்து பிளக்கப்பட்டிருந்தது. வேறோரிடத்திலும் காயமில்லை. வீதியில் போட்டு மிதித்துக் கொன்ற யானை அவனைக் காலால் எற்றி அடித்து விட்டிருக்கிறது.

''முருகண்டியில் பிச்சையெடுக்கிற பொடியன். இது கொஞ்ச மூளை சரியில்லை, காலமை வந்திருக்குது. யானை அடிச்சிட்டுது.''

''எங்கட பஸ் வராட்டில் மிதித்துச் சப்பளித்திருக்கும்''

துணுக்காய் பஸ் தூரத்தில் வந்தபோது யானையொன்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளிறல் கேட்டது. பஸ் டிறைவர் வீதியின் குறுக்கே பெரிய தொரு யானை கடந்து செல்வதைப் பார்த்திருக்கிறார், பஸ் வரு வதைக் கண்டுவிட்டுத்தான் யானை காட்டுக்குள் இறங்கியிருக் கிறது. அந்த யானைக்குப் பின்னங்கால் காயப்பட்டிருந்ததாம் கால்களை இழுத்திழுத்து, ஆனால் வேகமாகச் சென்றதாம். காலின் ரணத்தில் மொய்த்த ஈக்களை துதிக்கையால் அடித்துக் கலைத்ததாம். பார்த்தபோது வீதியோரத்தில் இந்தப்பையன் மிதிபட்டுக் கிடக்கிறானாம்.

'நொண்டியா, நீ இரண்டாம் பலியும் எடுத்துவிட்டாய். நீ கொடூரமான யானையாக மாறி வருகிறாய். நீ இனி இருக்கக் கூடாது, வந்தனா! நொண்டியா நீ வெகுதூரம் சென்றிருக்க மாட்டாய் நில்லடா.'

செங்காரன் ஆவேசம் வந்தவனாக வீதியிலிருந்து கீழே இறங் கினான். வீதிக்கு இணையாகச் செல்கின்ற றெயில் பாதையை யும் கடந்து அவன் காட்டுக்குள் புகுவதை எல்லோரும் வியப் புடன் பார்த்து நின்றனர். இவனும் ஒரு பைத்தியக்காரனோ?

மீண்டும் புதியதொரு இரவு படரத்தொடங்கியது.

## பன்னிரண்டு

யானைகள் சீரான தடத்தில் சென்றிருந்தன. செங்காரன் கோபவேசத்துடன் அந்தத் தடத்தில் விரைந்து சென்றான். பாதையின் மண் காய்ந்து கலகலத்துக் கிடந்ததால் தட அடை யாளங்கள் சரிவரத்தெரியவில்லை. ஆனால் மிதிபட்டு நிலத்து டன் சரிந்து கிடந்த புதர்களும், பற்றைகளும், புற்களும், அவை சென்ற திக்கைக் காட்டி நின்றன.

வெட்டைவெளிகளும் பின்னர் பற்றைக்காடுகளும் மாறி மாறிப்பாதையில் குறுக்கிட்டன. வானளாவி உயர்ந்த மரங்கள் மிகக்குறைவாகக் காணப்பட்டன. வீரை மரங்களும் சிறுபாலை மரங்களும் பாதையில் அதிகமாகக் காணப்பட்டன. பெரிய முதிரை மரங்கள் தறித்துக் காவிச் செல்லப்பட்டிருந்தன. மனிதரின் நட மாட்டம் அதிகமாக இருக்கின்ற காடு. அதனால் யானைகள் அங்கும் தரிக்காது விரைந்து சென்றிருக்கும் எனச் செங்காரன் நம்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் முறிந்து கிடந்த பாலைக் கொப்பொன்றில் நிறைய பாலைப் பழங்கள் கனிந்து கிடந்தன. அக்கொப்பைக் கரத்தில் எடுத்துக் கொண்டு அவன் விரைந்தான். இடையிடையே பழங்களைப்பிடுங்கி வாயிலிட்டுக் கொண்டான். பாதை மேடு பள்ளமாக ஏறியிறங்கி வளைந்து நெளிந்து செல்லத் தலைப்பட்டது.

பழையமுறிகண்டிக் குளத்தின் அலைகரையை நெருங்கிக் கொண்டிருந்தான். வானத்தைப்பார்த்தான். பின்னேரம் மூன்று மணியிருக்கும். வெண்கொக்குகள் இரண்டு தாலயத்துடன் சிறகடித்துப் பறந்து சென்றன. அதனைத் தொடர்ந்து நீர்க்காகக் கூட்டமொன்று பறந்து சென்றது. அருகில் குளம் ஏதோ இருக்க வேண்டும் என செங்காரன் எண்ணிக் கொண்டான்.

வேகமாக வந்தவன் திடீரெனத் திகைத்து நின்றான். மெல்லிய மூசலும் காதுகளை அடிக்கிற சத்தமும் எழுந்தது. அதனைத் தொடர்ந்து மரக்கிளைகள் முறிக்கப்படுகின்ற சத்தமும் கேட்டது. யானைக் கூட்டமல்ல. ஒரு யானைதான் என்பதில் ஐயமில்லை. பின்தங்கி வீதியில் பலி கொண்டுவிட்டு வந்த நொண்டியனோ?

'நொண்டியா கடைசியில் அகப்பட்டுக் கொண்டாயா? இம்முறை உன்னைத்தப்பவிட்டால் இனி இப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்காது போனாலும் போகலாம். கவனமாக உன்னை இம்முறை வெடிவைக்க வேண்டும்!'

அதிர்ஷ்டம் அவன் பக்கந்தான். அவன் காற்றின் எதிர்வளத்தில் நிற்கிறான். நிச்சயம் நொண்டியனுக்கு அவன் வந்திருப்பது மோப்பத்திற்குப் பிடிபடாது. யமன் வருவது தெரிகிறதா? 'வந்தனா, உன்னைக் கொன்றவன் அருகில் எங்கையோ நிற்கிறானடி.'

சருகுகளின் சத்தம் கூட எழாமல் அவன் பாதங்களை எடுத்து வைத்தான். நூறு யார்களுக்கு அப்பால் தடப்பாதையில் யானையொன்று பின்பக்கம் காட்டியபடி நின்றிருந்தது. பின்னங் காலை காட்டு இலையான்கள் திரளாக இரைந்தபடி மொய்த்துக் கொண்டிருந்தன. நொண்டியன்தான். இலையைப்பிடுங்கி வாய்க்குள் துதிக்கையால் அதக்குவதும் பின்னர் வாலால் இலையான்களைக் கலைக்க முயல்வதும் அந்த வேதனையில் மெல்ல முசுவதுமாக நின்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் பக்கத்தில் தைக்கின்ற குண்டுகள் நொண்டியனை நிச்சயம் சாக்காட்டாது. கண்களின் கீழ் அல்லது காதுகளின் அருகில் சன்னங்கள் பாயவேண்டும். நொண்டியன் திரும்புவதாக இல்லை. வந்தனா இனியும் பொறுக்க முடியாது. இப்போது நான் வைக்கப்போகின்ற வெடி அதனைக் கொல்லாமல் விடலாம். ஆனால் நிச்சயம் அவனை வருத்தத்தான் செய்யும். சித்திரவதைப்பட்டு பட்டு நொண்டியன் சாகவேண்டும் வந்தனா."

ஒரு மரத்தின் மறைவில் சாய்ந்து கொண்டு செங்காரன் துப்பாக்கியை தோளுடன் அணைத்தான்.

சுட்டுவிரல் விசையைத்தட்டினால் விடுபடும் குண்டு நொண்டியனின் பின்புறத்தில் ஆழமாகப்பாய்ந்து விடும். இருந்தாற் போல பிணநாற்றம் எழுந்தது அதே துர்நாற்றம். காதுகள் காற்றில் வீசி அடிக்கப்படும் ஒலி. அவன் பின் பக்கம் எழுந்தது. செங்காரன் நிலைமையைப் புரிந்து கொண்டான். அந்தச் சனியன் இங்கு எப்படி வந்தது?

யோசிக்க நேரமில்லை. விசையைத் தட்டிவிட்டான், குண்டு நொண்டியனின் ஒருபக்கத் தொடையைப் பிளந்து கொண்டு வெளியில் பாய்ந்தது வீரிட்டுப் பிளிறியபடி நொண்டியன் வேகமாக பாதையில் விரைந்து ஓடியது. அதன் கால்களுக்கு இப்படியொரு வேகம் இருக்குமா? மற்றவெடி தீர்ப்பதற்கு நேரமில்லை. பிணநாற்றம் நெருங்கி வந்தது. நொண்டியன் ஓடிய திசையில் அவனும் பாய்ந்து ஓடினான்.

மரத்தடியில் ரோச் லையிற்றை விட்டுவிட்டான். நின்று திரும்பிப் பார்த்தான். தனியனின் துதிக்கையில் அவனது ரோச் லையிற் மின்னியது. அதனை அது மூசிக்கொண்டு மரத்துடன் மோதி அடித்தது.

செங்காரனை ஆத்திரம் பற்றியது. இரண்டாவது வெடியை அந்தத் தனியனை நோக்கித் தீர்த்தான். குறி தப்பவில்லை. கண்குழிக்குள் சன்னங்கள் நெருக்கமாகப் பாய்ந்தன. தனியன் பயங்கரமாகப் பிளிறியபடி குப்புற முன்புறம் சரிந்தது. பின்னர் எழுந்தது. வெறியுடன் அவனை நோக்கிப்பாய்ந்து வந்தது. மின்னல் வேகத்தில் துப்பாக்கியை முறித்து புதிய தோட்டாக்களை செங்காரன் இட்டான். தன்னைத் தாக்க வருவது நொண்டியன்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பிரளயம். ஒன்றினைத் தொடர்ந்து ஒன்றாக இரண்டு வெடிகள் தனியனின் உச்சியில் ஏறி நுழைந்தன. அது அப்படியே நிலத்தில் சரிந்தது. அவன் அங்கு நிற்கவில்லை. விரைந்து ஓடினான்.

'விழுந்தது நொண்டியனாக இருக்கக் கூடாதா? வந்தனா என் பழி தீர்ந்திருக்குமே! நொண்டியா நீ எங்கு செல்லப் போகின்றாய்?'

தடப்பாதை பழைய முருகண்டிக் குளத்தின் அலைகரையில் மிதந்தது.

துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்த சத்தம் காட்டையே கலக்கி விட்டது. அலைகரையில் மேய்ந்து கொண்டிருந்த யானைகள் அவ்விடத்தைவிட்டு வேகமாகச் செல்வதை அவன் கண்டான். ஒன்றன் மீது ஒன்று துதிக்கையைப் போட்டபடி காட்டிற்குள் புகுந்து ஓடுவதை செங்காரன் கண்டான். இறுதியாக நொண்டியன் யானையும் வேகமாகப் போவதைக் கண்டான்.

சூரியன் மேலை வானின் சரியத் தொடங்கினான். இன்னொரு இரவு படரத் தொடங்கியது.

குளத்தின் நடுவில், பட்டு எலும்புக் கூடாகக்கிடந்த மரங்களில் நீர்க்காகங்களும், வெண்கொக்குகளும் அமர்ந்திருப்பது சாய்கதிரில் தெளிவாகத் தெரிந்தது. மஞ்சள் கொக்குகள் ஆறேழு ஒரு கிளையில் அமர்ந்து ஓய்வெடுத்தன. பெரு நாரைகள் சில ஒற்றைக்காலில் நின்று நீர்க்கரையில் தவம் செய்தன. வெடிச்சத்தத்தால் கலைந்த பறவைகள் சில வானத்தில் வட்டமிட்டன.

அவன் எதனையும் இலட்சியம் செய்யாமல் யானைக்கூட்டத்தைத் தொடர்ந்தான். இயங்கன் ஆற்றின் சிற்றோடைகளையும் பள்ளங்களையும் தாண்டி யானைக்கூட்டம் சென்றிருந்தது. சேற்றுநிலங்கள் சதுப்புக்கள் என்பனவற்றை விட்டு விலகி யானைகள் தம்தடப்பாதையை அமைத்திருப்பது தொடர்வதற்கு இலகுவாக இருந்தது. நெருக்கமற்றகாடு. காலவான் குளத்தினருக்காக யானைகள் ஊரணிக்குளத்தை நோக்கிச் சென்றிருந்தன.

நள்ளிரவு வரை அவன் தொடர்ந்தான். கால்கள் கெஞ்சத் தொடங்கின. குத்திய [illegible] களும் நோவினை உண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்கின, தென்னியன்குளம் ஊற்றின் கரையில் அவன் ஏறிய போது நிலவுமேற்கில் சரியத்தொடங்கியது. ஆற்றில் அவ்வளவு நீர் இருக்கவில்லை. யானைகள் ஆற்றினைக் கடந்து சென்றிருப் பது தெரிந்தது. ஆற்று நீரை அள்ளிக் குடித்து விட்டு நடந்தான். 'வந்தனா, ஓ என் வந்தனா.'

பசி — களைப்பு — துக்கம் — நடை.

தேராங்கண்டல் குளத்தில் உற்பத்தியாகின்ற தேராங்கண் டல் ஆறு வடமேற்காகத் தென்னியன் குளம்வரை பாய்ந்து, தென்னியன் குளத்தை விட்டு, வடபுறமாக வெளியேறும்போது தென்னியன் குளம் ஆறு என்ற பெயருடன் ஓடுகின்றது; நாரச் சன்தாழ்வுக் குளத்துக்கருகில் பல்லவராயன்கட்டு ஆறு என்ற பெயருடன் நொச்சிக்குடாவில் கடலுடன் கலக்கின்றது. தென் னியன் குளம் ஆற்றை யானைகள் இரு இடங்களில் கடந்து மூங்கில் வில்லுக் குளத்தின் அருகாகப் பெரியமாவில் என்ற குள வெளியினைக் கடந்து சென்றிருந்தன.

பெரியமாவில் குளவெளியை அவன் அண்மியபோது நடுநிசி தாண்டிக்கொண்டிருந்தது. பழைய முருகண்டியிலிருந்து ஏறத் தாழ பதினொரு மைல்கள் இடைவிடாது நடந்து வந்திருந்தான்.

தூரத்தில் நரிகள் ஊளையிடத்தொடங்கியிருந்தன. நிலவின் மயக்கம் அவற்றிற்குப் போதையூட்ட அவை இரவின் பயங்கர அழகை அவலப்படுத்தும் நோக்குடன் விட்டு விட்டு குரல் தந்தன.

அவன் பெரியமாவில் நெருங்கியபோது, றக்ரர் ஒன்றின் சத்தம் கேட்டது. செங்காரன் உண்மையில் திகைத்துவிட்டான். நடுக்காட்டில், நள்ளிரவில் றக்ரரின் சத்தம் சற்றுத் தூரத்தில் றக்ரரின் ஒளிவெள்ளம் பாய்ந்து திரும்பி மறைவதும் தெரிந்தது.

அவன் நடந்து, காட்டெல்லையைத் தாண்டியபோது, பெரி யமாவில் குளவெளி ஐம்பது ஏக்கர் வரை பரந்து கிடந்தது. அக்குளவெளியில் துணிச்சலும் வசதியுமுடைய கமக்காரன் ஒருவன் நெல்விதைத்து, அது முற்றி அறுவடைக்குத் தயாராக இருப்பது தெரிந்தது. குளவெளியின் வடபுறத்தில் ஒரு குடிசையில் விளக் கெரிவதும் தெரிந்தது. நெல் விதைத்திருந்த குளவெளியைச் சுற்றி ஒளி பரப்பியபடி, அவன் சற்று முன்னர் கண்ட றக்ரர் வருவதைக் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமாதிரியான காவல். நடுக்காட்டில் கமம் செய்து விட்டு அதனை மிருகங்களிடம் இருந்து காப்பாற்றுவதற்காக, பயிரைச் சுற்றிச் சுற்றி இடைக்கிடை றக்ரரில் அலைந்து காவல் காப்பதை இங்கு தான் அவன் கண்டான். றக்ராரின் சத்தம் கேட்டதும் காட்டோரத்தில் மிருகங்கள் வெருண்டு ஓடுகின்ற குளம்பொலிகள் கேட்டன. யானைக் கூட்டம் பெரியமாவில் வெளியைத் தாண்டிச் சென்றிருக்கின்றன என்பதில் செங்காரனுக்குச் சந்தேகமில்லை; றக்ரர் அவன் முன் வந்து நின்றது. றக்ரரில் இருந்தவன் அவனைப்பார்த்தான்.

''எங்கை வேட்டைக்கா? மன்னாரா?' என்று றக்ரரில் வந்தவன் கேட்டான்.

''இல்லை தம்பலகாமம்'' என்றான் செங்காரன். அவன் இவனை வியப்புடன் பார்த்தான். பைத்தியக்காரனோ?

தம்பலகாமம் எங்கே? பெரியமாவில் எங்கே?

பசிக்களைப்பு கண்கள் இருண்டன.

''வா குடிசைக்கு ஏறு.''

செங்காரன், றக்ரரில் ஏறி மட்காட்டில் அமர்ந்தான். றக்ரர் குடிசையை நோக்கிச் சென்றது.

''நல்ல வெள்ளாண்மை''

''அறுத்து வீட்டிற்குக் கொண்டு போகுமட்டும் எலக்கு நம்பிக்கை இல்லை. இண்டைக்கு இப்பக்கம் யானைகளின் நடமாட்டம் தெரியிது. விசப்பரீட்சைதான்'' என்றபடி அந்த மனிதன் பெருமிதத்துடன் சிரித்தான்.

செங்காரனுக்குக் குடிசையில் இரண்டு ரொட்டிகளும் சூடான தேனீரும் கிடைத்தன. வெகு நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். செங்காரன் மனம் திறந்து தன் கதையை அவனிடம் சொன்னான். மனப்பாரம் சற்று குறைந்தது போலப்பட்டது.

செங்காரனை இரக்கத்துடனும், வியப்புடனும் அந்த மனிதன் பார்த்தான். மிருகம் ஒன்றைப் பழிவாங்கப் புறப்பட்டிருக்கும் அவனைப் போன்ற ஒருவனை இன்றுதான் சந்தித்தான். காடு, மேடு, ஆறு எல்லாம் தாண்டி இரவு பகல் எல்லாம் நடந்து வந்திருக்கும், செங்காரனின் துயரம் எத்தகையது என்பதை அவனால் உணரமுடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் தூக்கம் கலைந்தது. செங்காரன் விடை பெற்று யானைகளின் தடத்தில் தொடர்ந்து நடக்கத் தொடங்கினான். பெரியமாவிலுக்கும் காயமோட்டைக்கும் இடையில் அவை அடர்த்த காட்டிற்குள் நுழைந்து தெற்காகச் சென்றிருந்தன. மூன்று மைல்கள் நடந்த பின்னர் சம்பாவில என்ற இடத்தை அடைந்தான். இரண்டு மூன்று குடும்பங்கள் வாழும் குக்கிராமம் அது.

சென்ற இரவு இக்காட்டுக் கிராமத்தின் ஓரத்தில் இருந்த இரண்டு கொட்டில்களுள் யானைகள் புகுந்துவிட்டன. விதைப்பதற்காக அடுக்கி வைத்திருந்த விதைநெல் மூடைகளை அரை மணியில் சாப்பிட்டுவிட்டன. கொட்டிலில் இருந்தோர் பயத்தில் ஓடிவிட்டார்கள்.

ஒரு புலவிற்குள் நுழைந்து ஓர் ஆண்டு வளர்ந்திருந்த பத்து தென்னை மரங்களையும் யானைகள் முறித்து தின்றுவிட்டிருந்தன.

'வந்தனா, நீ செத்துவிட்டாய். நான் இங்கு சாப்பிட்டுக் கொண்டு கதைகேட்டுக்கொண்டிருக்கிறேன். உன்னைக்கொன்ற அந்த நொண்டியன் சென்றுகொண்டிருக்கிறான். டேய் தொண்டியா!'

செங்காரன் பற்களை நறுநறுவெனக் கடித்தான். கடைக்காரன் அவனை வியப்புடன் பார்த்தான்.

## பதின்மூன்று

"வந்தனா என்னிடம் கோபமா?"

"ஏன்?"

"பின்னை ஏன் பேசாமல் போனாய்?"

"ஐயா இருந்தார் காணவில்லையே?"

"வந்தனா ஒரு விசயம்!"

"என்னவாம்?"

"இன்றிரவு எல்லாரும் நித்திரையானவுடன் வேப்பமரத் தடியில் சந்திக்கிறாயா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயையோ நான் மாட்டன் எனக்கு உங்களை விளங்குது மாட்டன்.''

''என்ன வந்தனா? என்னில் நம்பிக்கையில்லையா? ஒண்டும் செய்யமாட்டான்.''

அவள் பேசாமல் நின்றிருந்தாள்.

''சரியா?'' — அவள் தலையை மெதுவாக அசைத்து.........

❀

'வந்தனா, என் உயிரே, இனி எப்போதும் சந்திக்க முடியாத இடத்திற்குச் சென்றுவிட்டாயே? உன்னை இனி நான் காணவே மாட்டேனா? இந்த உலகத்தில் உன்னை நான் காண முடியாவிட்டாலும் மறு உலகத்தில் நிச்சயமாகச் சந்திப்பேன். வந்தனா எனக்காகக் காத்திரு.'

பாலியாற்றங்கரையில் அவன் அமர்ந்திருந்தான். பாலியாற்றில் சலசலத்து விரைந்த நீர் தெள்ளியதாக இருந்தது. பாலியாறு வவுனிக் குளத்தை நிரவி மேற்குத் திசையில் பாய்ந்து வெள்ளாங்குளத்திற்குத் தெற்கே கடலுடன் கலக்கின்றது. பன்னிரண்டு அடிப்பள்ளத்தில் யானைகள் இறங்கி ஏறி பாலியாற்றைக் கடந்திருந்தன. அவை எங்கே இப்படி ஓடிக்கொண்டிருக்கின்றன?

நொண்டியனுச்குக் காலின் ரணத்துடன் தொடைபிழந்த காயமும் சீழ்பிடிக்கத் தொடங்கியிருக்கும் மனிதனை வெறக்கும் மிருகமாக அவன் இன்னமும் கூடுதலாக மாறியிருப்பான்.

யானைக்கூட்டம் விரைந்த தடத்தில் இன்னொரு இரவும் அவன் நடந்தான். பாலி ஆற்றிலிருந்து பத்து மைல்கள் தென்கிழக்காகச் சென்ற அவை, பறங்கியாற்றையும் கடந்து சென்றிருந்தன. பறங்கியாற்றங்கரையில் மிளகாய்த் தோட்டம் செய்திருந்த படித்த வாலிபர்களின் நாற்பது ஏக்கர் தோட்டத்தினூடாக அவை சென்றிருந்தன. அவற்றின் காலடிபட்ட மிளகாய்த் தோட்டம் நிலத்தோடு சரிந்து கிடந்தது. ஒரு அடி 'எஸ்லோன்' பைப்புகள் யானைகளின் காலடியில் மிதிபட்டு உடைந்து கிடந்தன. அவை பறங்கியாற்றைக் கடந்து, பறங்கியாற்றின் இடது கரையோரமாக, பாவற்குளத்தை அடைந்திருந்தன. தென்னியன் குளத்திலிருந்து ஏறத்தாழ எழுபது மைல்கள் அவை கடந்து சென்றிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செங்காரன் சலிப்படையவில்லை. அவனுக்கு இதைவிட இனி வாழ்வில் வேறொரு வேலை இருக்க முடியாது. என் 'வந்தனாதான் என் வாழ்வு. அந்த வாழ்வு முடிந்து விட்டது. இனி என் வாழ்வை முடித்த நொண்டியனை முடிப்பதுதான் என் அடுத்த இறுதிக்கடமை. வந்தனா —— வந்தனா——'

அவன் முகத்தில் ஒரு வாரத்திற்குரிய தாடி வளர்ந்திருந்தது. தலை வாரப்படாமல் பறட்டைபற்றிவிட்டது. பகல் — இரவு — பகல் — இரவு — பனியையும், இருளையும், பசியையும், கானகத்தையும் கவனியாது அவன் பழிவாங்க ஒரு யானையைத் தொடர்ந்து வந்திருக்கிறான். அவனை இந்தக்கோலத்தில் பார்த்தவர்கள் நிச்சயம் பயித்தியக்காரன் என்றுதான் சொல்வார்கள்.

இரவு படர்கின்ற மம்மல் வேளையில் செங்காரன் பாவற்குளத்தின் கல்லாற்றின் கரையை அடைந்தான். கரையோரமாக யானைகள் தென்மேற்குத் திசையில் சென்றிருந்தன. வழியில் குடுவெந்த புலவுக் கிராமத்தின் வயல்களில் அவை மேய்ந்து விட்டுத்தான் சென்றிருப்பதாக அறிய முடிந்தது. கல்லாற்றில் நீர் கரைபுரண்டு பாய்ந்தது பாவற்குளம் நிரம்பினால் கல்லாற்றில் நீருக்குக் குறைவில்லை. பாவற்குளத்தை நிரப்பிப் பாய்கின்ற கல்லாறு செட்டி குளத்தின் ஊடாகப் பாய்ந்து அருவியாற்றுடன் சேர்கின்றது. அருவியாற்றங்கரை யானைகளின் சொகுசான இல்லம்.

பசியும் களைப்பும் செங்காரனை வாட்டின. இன்று நொண்டியனை எப்படியாவது முடிக்கவேண்டும். இல்லையேல் அவனைக் காடு முடித்துவிடும். உடம்பில் களைப்பு மேலியது. தேகம் மெதுவாகச் சுடுவதுபோலவும் பட்டது. கல்லாற்றின் நீரை அள்ளிக் குடித்து தன்மீதும் தெளித்துக்கொண்டான். மனதில் ஏதோ சொல்லியது. இன்று எல்லாம் சரி என்று.

எழுந்து நடந்தான். நிலவோன் மங்கலாக நிலமகளைக் குளிப்பாட்டினான் காட்டின் இருளில் நன்கு பழக்கப்பட்ட செங்காரனின் விழிகள்கூட சற்று மங்கின. கல்லாற்றின் அருகாக வந்த தடப்பாதை சரி தெற்காகப் பிரிந்து சென்றது. அவ்வழியில் யானைகள் சென்றிருப்பது தெரிந்தது. ஒரு யானை பின்னங்காலைக் கூடுதலாக இழுத்துச் சென்றிருப்பதும் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வந்தனா — என் வந்தனா — இன்று பழி முடிப்பேன்.'

கால்கள் இடறி விடுவதுபோல ஒரு அவஸ்தை. 'மனமே' இன்று சோர்ந்து விடாதே. கடவுளே, என் இலட்சியத்தை அடையச்செய் — பழி—பழி வந்தனா,—கால்களைத் திடமாக வைத்து அவன் நடந்தான். இருண்ட கண்கள் மீண்டும் ஒளிபெற்றன அவனுக்கு என்ன பிடித்துவிட்டது?'— நான்கு மைல்கள் நடந்திருப்பான். தூரத்தில் பெரியதொரு வெட்டைவெளி தெரிந்தது பெரியதொரு குளம். குளவெளி அது.

செட்டிகுளம் அது என்பதை அவன் அறியவில்லை: அந்தக் குள வெளியில் யானைக் கூட்டம் நிற்பதை அவன் கண்டான். மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

'வந்தனா — வந்தனா — டேய் நொண்டியா — நீ அதற்குள் தான் நிற்பாய். அல்லது வெட்டையின் அயலில் எங்காவது நிற்பாய் —'

பாதையில் யானையின் லத்திக் கும்பம் ஒன்று காலில் இடறியது.

அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

## பதினான்கு

நிலவின் ஒளி, குளவெட்டையில் மேய்ந்து கொண்டிருந்த யானைகளைக் கருங்குன்றுகளாகக் காட்டியது. வௌவால்கள் வானத்தில் குறுக்கும் நெடுக்குமாக அலைவது துலக்கமாகத் தெரிந்தது. ஒன்று இரண்டாக வானம் முழுவதும் நூற்றுக்கணக்கான வௌவால்கள் சிராகத்தம் தோல் இறகை அலைத்து வட்டமிட்டன. இப்படி வௌவால் அலைந்த ஒரு இரவில்தான் வந்தனா'!

'நொண்டியா, நான் உன்னைத் தொடர்ந்தது போதும். இன்று நீ என்னைத் தொடர வைக்கப் போகின்றேன், அதுதான் சரி. நீ என்னைத் தொடரவேண்டும். இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக்கொள்வோம். வாழ்வா, சாவா—டேய் நொண்டியா! நான் வாழவிரும்பவில்லை. ஆனால் நீ வாழ்வது இந்த மனித சமூகத்திற்குக் கூடாது. நீ அழிய வேண்டிய மிருகம். வெறியன்

'என் இன்ப வாழ்வை அழித்து விட்டாயே? உன் இணையை நான் அழித்தேனோ? உனக்கு என்ன கெடுதலை நான் செய்தேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனாவும் நானும் எப்படியெப்படி எல்லாம் வாழக் கனவு கண்டோம் தெரியுமா? நீ மிருகம் — உனக்கு எங்கே தெரியப் போகின்றது?"

செங்காரன் தன் கிழிந்த சேட்டைக் கழற்றித் தூரவீசி எறிந்தான். சாறத்தை நன்கு உயர்த்தி மடித்துக் கட்டிக்கொண்டான். துப்பாக்கியில் தோட்டா சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டான் எந்த நேரத்திலும் தோட்டா எடுக்கத்தக்கதாக பெல்டை ஒரு தடவை அசைத்துப் பார்த்துக்கொண்டான். துப்பாக்கியை மரத்தில் சாய்த்து வைத்துவிட்டு பாதையில் சூட்டுடன் கிடந்த யானை லத்தியை எடுத்து தன் உடம்பெல்லாம் நன்றாக அப்பிக்கொண்டான். மணத்தால் ஓங்காளித்துக் கொண்டு வந்தது. 'வருவது வரட்டும் — இதைவிட வேறுவழியில்லை — நான் உன்னை நெருங்கி வரப்போகின்றேன். என் வாடை உனக்குத் தெரியக்கூடாது.'

தேகம் எரிந்தது — கடித்தது — 'வந்தனா — வந்தனா'

துப்பாக்கியை ஓசையின்றி எடுத்துக்கொண்டான். யானைகள் மேய்ந்து கொண்டிருந்த பக்கமாக மிக்க அவதானத்துடன் நடக்கத் தொடங்கினான். அவன் விழிகள் நொண்டியனை அடையாளம் காண்பதற்கு முயன்றன. தென்மேற்கிலிருந்து காற்று வீசியதால் மனிதன் ஒருவன் நெருங்குவதை யானைகள் காணவில்லை. மனிதவாடையை லத்தி கட்டுப்படுத்தியது.

எங்கே நொண்டியன்? நொண்டியன் எப்போதும் கூட்டத்தைவிட்டுப் பிரிந்துதான் உணவு தேடப்போகும் என்பது அவனுக்கு நினைவு வந்தது. வெட்டையின் எல்லைப் புறங்களில் அவதானித்தபடி கால்களைச் சரசரப்பின்றி எடுத்து வைத்தான்.

குளவெட்டையின் தென்புறமேட்டில் கரியதொரு வடிவம் ஏறியதை அவன் கண்டான். ஏறிய அந்த உருவம் வெட்டையில் இறங்கியது. இறங்கும்போது மிகுந்த அவதானத்துடன் இறங்கியது.

நொண்டியன்தான்!

செங்காரனை வெறி பற்றியது. அந்தப் பக்கமாக விரைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிச்சென்றான். அவன் உடலில் இப்படி ஒரு பலம் எப்படி வந்தது? அணையும் தீபத்திற்கு வரும் பலம் இதுவோ? தன்னை நோக்கி ஒரு உருவம் ஓடி வருவதைக் கண்ட நொண்டியன் திடீரெனக் கலவரம் அடைந்தது. திகைத்து அப்படியே நின்றது. மோப்பசக்தி செயற்பட, மனிதன்! நொண்டியனுக்கும் கோபம் எல்லை கடந்தது. மனிதன்' வாலினால் ஈக்கள் மொய்த்த தன் காலை ஒரு தடவை அடித்துக்கொண்டது பின் தொடைப் பிள வில் ஊனம் வடிந்திருந்தது. முன்னங் காலால் ஒரு தடவை உதைத்து மிதித்தது துதிக்கையை நிலத்தில் ஓங்கி அறைந்தது. காதுகள் காற்றில் வேகமாக அடித்துக்கொண்டன. செங்காரனை நோக்கி வேகமாக விரைந்து வந்தது!

செங்காரன் தரித்து நின்றான். பின்னர் தென்புறமாக அசைந்து ஓடத்தொடங்கினான். அவன் ஓட நொண்டியன் துரத்திச் சென்றது. தன் காலிலும் தொடைகளிலும் ஏற்பட்ட ரணக் காயங்களை மறந்து அது அப்படி ஒரு வேகத்தில் செங் காரனைத் துரத்தியது. வெட்டையை விட்டு செங்காரன் காட்டிற்குள் புகுந்தான். வெறிபிடித்த நொண்டியன் தன் கூட் டத்தை விட்டு வெட்டையின் எல்லைக்கு வந்துவிட்டது.

செங்காரன் மரத்தின் ஓரத்தின் மறைந்து நின்று முதல் வெடியை வைத்தான்!

'வந்தனா' முதல் வெடி நொண்டியனின் தலையில் பட்டுச் சரிந்து சென்றது. நொண்டியன் பயங்கரமாகப் பிளிறியது; வெடி வந்த திக்கில் பாய்ந்து வந்தது. செங்காரன் தாவி ஓடினான்.

பூவரசங்குளம் வீதிக்கு அருகாக அமைந்துள்ள காடு. ஒரு முறை காடழிக்கப்பட்டு எரிக்கப்பட்டு கட்டைகள் பிடுங்காமல் எஞ்சி நின்றன. இடையிடையே பெரிய மரங்கள் சில அழிக்கப் படாது நின்றன. அத்துடன் சிறியளவில் பற்றைகளும் வளர்ந் திருந்தன. அக்காட்டின் இடையே செங்காரன் ஓடினான். கட்டைகள் இடறின. கால்களில் முட்கள் குற்றி இரத்தம் ஒழுகியது. பாய்ந்த ஓடி இன்னொரு மரத்தின் மறைவில் நின்று கொண்டான். நொண்டியன் எதிர்ப்பட்டவற்றைத் துவம்சம் செய்துகொண்டு ஆவேசமாக வந்துகொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டுமில்!' இரண்டாவது வெடி நொண்டியனின் விழிகளைச் சரியாகத் துளைத்துக்கொண்டு பாய்ந்து தைத்தது. கண் குழியிலிருந்து கொப்பளித்துக்கொண்டு இரத்தம் பீறிட்டது. நொண்டியன் அப்படியே முன்பக்கமாகச் சரியப் பார்த்தது. துதிக்கையைத் தரையில் ஊன்றித் தன்னைச் சமாளித்துக்கொண்டது. பயங்கரமான மூசல். பிளிறல் காட்டையே கலக்கியது. கோபாவேசத்துடன் முன்னேறியது. பழைய வேகமில்லை. செங்காரன் மற்றிரு தோட்டாக்களை துப்பாக்கியில் நிரப்பிக்கொண்டான். மர மறைவை விட்டு வெளியே வந்தான்.

'வந்தனா இதோபார் உன்னை இரத்தச் சேற்றில் நசுக்கியவனை இரத்தத்தால் குளிப்பாட்டுகிறேன். வந்தனா உன்னையா இவன் தூக்கி அடித்தான்?'

துப்பாக்கி வெடித்தது!

குண்டுகள் யானையின் துதிக்கையில் பலமாக ஏறின. 'உன்னையா இவன் காலால் உதைத்துப் பந்தாடினான்'

துப்பாக்கி மீண்டும் குண்டுகளைக் கக்கியது. நொண்டியனின் முன்னங்காலொன்றில் ரவைகள் ஏறின. செங்காரனின் ஆத்திரம் தீரவில்லை. நொண்டியன் அசைவின்றி அப்படியே மூசியபடி நின்றிருந்தது.

துப்பாக்கி மீண்டும் மீண்டும் வெடித்தது! செங்காரனின் ஆத்திரம் திருமட்டும் வெடித்தது!

'வந்தனா—வந்தனா—வந்தனா—வந்தனா!' பெருங்குரலில் செங்காரன் கதறியபடியே துப்பாக்கியின் விசையை இயக்கினான்.

நொண்டியன் வலு ஓர்மமுள்ள யானை, துப்பாக்கிக் குண்டுகள் அதன் உடலைச் சன்னமாகத் துளைத்தும் அது ஒரு பக்கம் சரிந்து விழவில்லை அப்படியே நான்கு கால்களையும் முறித்து மடக்கியபடி தொப்பென நிலத்தில் படிந்தது. அதன் துதிக்கை, நிலத்தில் உடல் முன்பக்கம் சரியவிடாது ஊன்றியது. காதுகளின் அசைவு அப்படியே மடிந்து நின்றது.

செங்காரன் அதனை நெருங்கி வந்தான். 'வந்தனா — —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ என் வந்தனா —' பெருங்குரலில் அழுதான். 'என் உயிரே — என்னவளே வந்தனா —'

தன் கண்களின் முன்னே மடிந்து கிடக்கும் யானையைப் பார்த்தான். அதன் ஒரு வழி திறந்திருந்தது.

'என்னைக் கொன்றதால் உன் வத்தனா கிடைத்து விட்டாளா?'

செங்காரன் அடங்கா ஆத்திரத்துடன் துப்பாக்கிப் பிடியால் ஓங்கி நொண்டியனை அடித்தான்.

'வந்தனா — என் வந்தனா —' அவன் விழிகள் அருவியென நீர் சொரிந்தன.

திரும்பி நடந்து பூவரசங்குளம் வீதியில் ஏறி நடக்கத் தொடங்கினான் செங்காரன்.

'வந்தான —— வந்தனா —— உன்னிடம் வருகிறேன் ——' புதியதொரு நாளைப் பிறப்பிப்பதற்காக உலகம் சுழன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org